குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] குரோதன ஆண்டு ஆடித்திங்கள் 10-8-85 [இதழ் 9

241.
14/..78

ஆடிவெள்ளியை முன்னிட்டு

அருள்மிகு தையல்நாயகி அம்பாள் காட்சி அருள்கிருர்



நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்(று)
ஆயகி யாதி யுடையாள் சரணம் அரண் நமக்கே.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

நீயே துணையன்றி வேறில்லை
யென்பதை நின்னருளும்
நாயேன் மனமுந் திரமா
யறியும்எந் நாட்டிலுநான்
போயே திரியினும் ஞானப்ர
காசநின் பொன்மலர்த்தாள்
பேயேன் மறப்பதுண் டோஇனி
மேலும் பிறக்கினுமே.

—ஞானப்பிரகாசமாலை 11

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

உ
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10-8-85 | இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	உலகக் குழப்பம் தெளிய மருந்து ..	679
2	தருமை ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	683
3	திருஞானசம்பந்தர் ...	689
4	சுதந்திரதேவி துதி ...	694
5	கதிரவன் குடும்பம் ...	695
6	அபிராமி அந்தாதி	698
7	பதினொரு திருமுறைகள் வகுத்த காலம் ...	702
8	சிவஞானமுனிவரின் பேருரைத் திறன் ...	708
9	திருவருட்பாத் திரட்டு	711
10	திருப்புறவார்பனங்காட்டூர் தலச் சிறப்புக்கள் .	715
11	செய்திகள் ...	718
12	எதிர்காலம் ..	723
13	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 7 ...	727

ஆண்டுச் சந்தா உள்நாடு	ரூ. 12	ஆயுள் சந்தா உள்நாடு	ரூ. 125
ஆண்டுச் சந்தா சிலோன்	25	ஆயுள் சந்தா வெளிநாடு	350
ஆண்டுச் சந்தா வெளிநாடு	35		

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன – ஆடி – 10-8-85 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

உலகக் குழப்பம் தெளிய மருந்து

சிலையதுவெஞ் சிலையாகத் திரிபுர மூன்று எரிசெய்த
இலைநுனைவேல் தடக்கையன் ஏந்திழையாள் ஒருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத்து அருமணியை அடிபணிந்தால்
நிலையுடைய பெரும்செல்வம் நீடுஉலகில் பெறலாமே!

— திருஞானசம்பந்தர்.

மனித உள்ளம் :

மனிதன் ஒருவேளையாவது வாழ்க்கையின் தன்மையினை ஆராய்ந்து அறிய முற்படுவதில்லை. ஆனால், அவன் உள்ளத்திலே வீணாக எண்ணும் எண்ணங்கள் விநோதமானவை - அவை ஒரு கோடி அல்ல, மிகப்பலகோடி எண்ணங்கள். இந்நிலையை வள்ளுவப் பெருந்தகை வற்புறுத்திப் பேசுகிறார்.

"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

எங்கும் குழப்பம் – எதிலும் குழப்பம் :

உலகம் எங்கணும் ஒரே குழப்பநிலை நிலவுகிறது. சர்வதேச நிலையிலே - தேசீய நிலையிலே - மாநில நிலையிலே எங்கும் எதிலும்

குழப்ப நிலையே தென்படுகிறது. சர்வதேசிய நிலையில் வல்லரசுகளிடையே வழக்குகள் கொஞ்சமோ? அமெரிக்காவும் ரஷியாவும் தத்தம் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட அமைதியற்ற சூழலை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை என்ற அமைப்பு இருந்தபோதிலும் சர்வதேசிய நிலையிலே சமாதானச் சூழல் சரிந்துகொண்டே போகிறது. கூட்டுச்சேரா நாடுகள் சபையும் அத்துணைச் செயல்படாது தம்பித்துவருகிறது. அணுகுண்டு ஹைட்ரஜன்குண்டு தயாரிப்பதிலே அணுவளவும் குறையாமல் போட்டி நடக்கின்றது. நமது அண்டை நாடுகளும் - பாகிஸ்தான் போன்ற பக்கத்து நாடுகளும் பாரதத்திற்குத் தொல்லைதருகின்றன. அணுகுண்டுதயாரிப்பதிலே பாகிஸ்தான் அதிதீவிரமாக ஈடுபட்டுப் பாரதத்தைப் பயத்திற்கு ஆட்படுத்தி வருகிறது. இலங்கையில் தமிழர்களைப் படுகொலை புரியும் பாதகச்செயல் இன்னும் ஓயவில்லை. இலங்கை, இன ஒழிப்புச்செயலை (genecide) இன்னும் நிறுத்திய பாட்டைக் காணோம். பாரதத்தில் உள்நாடுகளிடையே - மாநிலங்களுக்கு இடையே மகிழ்ச்சிகரமான சூழ்நிலை காணப்படவில்லை. அஸ்ஸாம், குஜராத், பஞ்சாப் முதலிய மாநிலங்களிலே அமைதிச் சூழ்நிலை தென்படவில்லை. பிரதமர் ராஜிவ் காந்தி பஞ்சாப் தலைவர்களுடன் ஒற்றுமைக்கான ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய செயலே. ஆனாலும் சீக்கியத் தீவிரவாத விஷமிகள் அண்மையில் ஒருபாராளுமன்ற உறுப்பினரிர் தம்பதியைக்கொன்றுவிட்டதாகச் செய்தித்தாளிலே படிக்கிறோம். பாவம்!

உலகமெங்கணும் நிலவும் அமைதியற்ற சூழ்நிலையைக்-குழப்பச் சூழ்நிலையை எங்ஙனம்தெளிவிப்பது? இஃது ஒருபெரிய பிரச்சினையே ஆகும். ஆனால் உலகம் உய்ய இந்த இழிநிலை உடனடியாக நீக்கப்படவேண்டும் - போக்கப்படவேண்டும். அஃது எப்படி சாத்தியமாகும்?

தனிமனித வாழ்வு தரம் உயரவேண்டும்:

உலகம் என்பது மக்கள் தொகுதியைக் குறிக்கிறது. மக்கள் இல்லையேல், மக்கள் தொகுதியைக் குறிக்கும் உலகம் இல்லை. ஆகவே ஒவ்வொரு தனிமனிதனும் உலகத்தின் அங்கம் ஆகிறான் - உறுப்பினன் ஆகிறான். உலகம் - தரம் மாற வேண்டுமானால் தனி மனிதனின் வாழ்வின் தரம் மாறவேண்டும்-தன்மை மாறவேண்டும். போக்கு மாறவேண்டும் - நோக்கு மாறவேண்டும். வாழ்வில் தெய்வ பக்தி சிறக்கவேண்டும். பாரதியார் பேசுவார்;

"தெய்வம் மறவார் செயும் கடன் பிழையார்
ஏதுதான் செயினும் ஏதுதான் வருந்தினும்
இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவர்"

மேலை நாடுகளில் மெத்த பொருள் வளம் உண்டு. ஆனல் அமைதியைத் தருகின்ற - நிம்மதியைப் படைக்கின்ற ''அருள்நிதி'' அங்கே கிடைக்கவில்லை. ஆகையால் வாழ்க்கையில் சலிப்படைந்து விட்ட மேனுட்டவர் நிம்மதியையும் அமைதியையும் நாடி நம் நாட்டிற்கு வருகின்றனர். இந்து சமயத்தில் ஈடுபட்டு இவற்றைப் பெறுகின்றனர்.

''பத்தி யுடையார் காரியத்தில் பதருர் மிக்க பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மைபோல் மெல்லச் செய்து பயன்அடைவார்''
(பாரதியார்)

இதுவே பக்தியின் பயனுகும். பண்பாடாகும்.

அற நிறுவனங்களின் ஆக்கப்பணி :

ஆக்கப்பணிபுரிவதற்காகவே அறநிறுவனங்கள், திருமடங்கள், திருக்கோயில்கள் தோன்றின. இன்று இவைகள் சரியானபடி இயங்க முடியாதபடி இன்னல்கட்கு உள்ளாகிவிட்டன. பல திருக் கோயில்களில் அன்ருட நடைமுறையிலுள்ள பூஜை வழிபாடுகள் நடத்த முடியாது நலிவுறுகின்றன. திருக்கோயில்கட்கும் திருமடங் கட்கும் ஆதாரமான சொத்து விவசாய நிலங்களே ஆகும். இவற்றி லிருந்து வரும் வருவாய் பெரிதும் குறைந்துவிட்டது. ஆகையால் திருமடங்கள், திருக்கோயில்கள், அறநிறுவனங்கள் செயல் அற்று இயங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அவைகள் எவ்வித ஆக்கப் பணியையும் மேற்கொள்ளமுடியாத அவநிலைக்கு ஆளாகிவருகின் றன. அரசாங்கச் சட்டதிட்டங்களும் அவற்றின் வளர்ச்சிக்குக் கை கொடுப்பதாக அமையவில்லை. இதன் பயன் இவ்வமைப்புக்கள் இயங்கமுடியாமல் இன்னல்களுக்கு ஆளாகநேர்ந்துவிட்டது. இது மக்கள் கவனத்திற்கு வரவேண்டும்; அரசாங்கத்தின் கவனத்திற்கும் வரவேண்டும். ஞானசம்பந்தம் இந்நிலைகுறித்துப் பலப்பல தலையங் கங்கள் தீட்டியுள்ளது வாசகப் பெருமக்கள் அறிந்த ஒன்றே ஆகும்.

குழப்பம் நீங்க :

1. உலகில் நிலவும் குழப்பநிலை நீங்க முதலில் மக்களிடையே தெய்வபக்தி வளரவேண்டும் - கடவுள் காரியங்கள் ஏதொரு தட்டுப் பாடும் இன்றி - தடையின்றி நடைபெறவேண்டும். திருக்கோயில் களில்காலவழிபாடுகள் கச்சிதமாக நடைபெறவும், மக்களைத்தெய்வ பக்தியில் ஈடுபடுத்தும் திருவிழாக்களும், விரதங்களும், உத்சவங் களும் விடுபடாமல் மேற்கொள்ளவும் வேண்டும்.

2. மக்களிடையே சமய உணர்வு மேம்பட, பரவலாகப் பிரச்சாரம், கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும், கிரமமாக நடத்தப்பெறவேண்டும். இப்பணியை நடைமுறைப்படுத்த சமயத்

தலைவர்களும், அறநிறுவனங்களும் மேலும் தீவிரம் கொள்ள வேண்டும். அரசும் அறநிலையத்துறையும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். அப்பொழுதுதான் இவற்றிற்கு மக்களிடையே மேலும் மதிப்பும் மரியாதையும் நம்பிக்கையும் ஏற்படும்.

3. அரசியல் துறையிலே ஆன்மீக உணர்வும் கலந்து செயல் பட்டால் அன்றி, அரசியல் தூய்மையோடும், கண்ணியத்தோடும், மதிக்கத்தக்க முறையிலும் விளங்க இயலாது என்பது உறுதி. காந்தியடிகள் இதனைச் செய்ய முயன்றதைப் பாரதி குறிப்பிடுவார்.

" தன்னுயிர் போலே தனக்குஅழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்,
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்று உணர்தல்,
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!"

இந்நிலை வராவிட்டால் மேல்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையில் இலஞ்சம், ஊழல், வஞ்சம், சுயநலம், தேசப்பற்றின்மை அமைதியின்மை இவைகள்தான் அரசியலில் தலை எடுக்குமே அன்றி மக்கள் நலம்கருதும் மாபெரும் நோக்கு இராது. அற அடிப் படையில் ஆன்மீக மணம் வீசும் அந்தச் சூழலில் அரசியல் அமைய வில்லை என்றால் உலகில் குழப்பம்தான் காணப்படுமே அன்றி, குணம் காணப்பட மாட்டாது. அமைதியும் மகிழ்வும் அமைய மாட்டாது - சுபிட்சமும் சுகமும் கைகூடமாட்டாது. காலாகாலத்தில் மழைவளம் கிட்டாது. இயற்கையின் சீற்றம் அடங்காது - இன்னல் குறைவுபடாது.

அரசியல்வாதிகளும், சமுதாயப்பிரமுகர்களும் மக்களும் இதனை உணர்ந்து சிந்தித்துச் செயல்பட முன்வருவார்களாக.

" கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனில் "

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

" வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம். "

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீகாழி வட்டம் மாதானம்

அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் மண்டலாபிடேக பூர்த்தி விழாவிற்கு எழுந்தருளி

வழிபாடாற்றி வழங்கியருளிய

ஆசியுரை

22—7—1985

தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியைத், தானம்என்றும்
இடுங்கோள், இருந்த படியிருங் கோள், எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைத்த வைவேல்
விடுங்கோன், அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.

(கந்தரலங்காரம்)

மூன்று கடமைகள் :

தருமம் என்பது அறம் எனப்படும். அது பிற உயிர்களின் நன்மைக்காகச் செய்யப் பெறுவது. கருமம் என்பது செயல் அல்லது வினை எனப்படும். அது தன்பொருட்டுச் செய்யப் பெறுவது. நித்திய கருமங்கள் அனைத்தும் தன்னலத்திற்குச் செய்வன என்பதை அனைவரும் உணர்வர். தானம் என்பது கொடை எனப்படும். அது நாம் முற்பிறவியிலும் இப்பிறப்பிலும் செய்த பாவங்கள் நீங்குதல் பொருட்டுச் செய்யப் பெறுவது. பிதிர்களின் நலம்கருதியும் செய்யப் பெறுவது. கோ (பசு) தானம், பூமிதானம், பொன்தானம் போன்ற தானங்களை இறந்தோர் நினைவுநாளாகிய திதியன்று செய்யும் பொழுது அவர்களின் பாவங்கள் விலகுகின்றன. தருமம், கருமம், தானம் எனும் இம்மூன்றில் தருமம் பிறர்பொருட்டுச் செய்யப் பெறுவதாயினும் அதனால் செய்வோனும் நலம் பெறுகிறான் என்பது உண்மை. எனவே ஒவ்வொரு மனிதனும் இம்மூன்றினையும் இன்றி யமையாக் கடமைகளாக எண்ணிச் செய்துவருதல் அவசியம். இக் கடமைகளைச் செய்வதால் தன்னலமும் பிறர்நலமும் தழைத்துச்

சமுதாயம் வளரும் என்பதில் ஐயமில்லை. இக்கருத்தினை அறநூல்களும் அருள்நூல்களும் வற்புறுத்திக் கூறுகின்றன. இவ்வகையில் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் கடமைகளை அறநெறி பிறழாமலும் நடுநிலை தவறாமலும் செய்து வருதல் இன்றியமையாததாகும்.

தருமனின் தருமம் :

தருமத்தை நெறிதவறாமல் செய்து வருவோன் தருமன் எனப் படுவான். தருமன் என்னும் சொல் இயமனைக் குறிக்கும். அவன் எல்லா உயிர்களிடத்தும் நடுநிலை தவறாமல் தனக்குற்ற அறத்தைச் செய்து வருவதால் தருமன் எனப் பெயர்பெற்றான். உடலினின்றும் உயிரைக் கூறுபடுத்திப் பிரிப்பதால் அவனுக்குக் கூற்றுவன் என்னும் பெயரும்உண்டு. காலம் தவறாமல் கடமைகளைச்செய்பவன் என்னும் கருத்தில் அவனைக் காலன் என்றும் கூறுவர். அத்தகைய தருமனும் ஒருமுறை அறநெறி தவறி நடந்துவிட்டான். அதனால் ஈசனின் சினத்திற்கு ஆளாகி உதைபட்டு இறந்தான். அவ் வரலாறே மார்க்கண்டேயர் வரலாறாகும்.

தருமனுக்கு விதித்த விதி :

மார்க்கண்டேயர் வரலாற்றைப் பேசும்பொழுது, தருமன் தனக்கு விதித்த விதியின்படி தானே மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சென்றான்; அவனை இறைவன் உதைத்து உயிர்கொள்ள லாமா? இது அறமாகுமா? என்று சிலர் கேள்வி கேட்கின்றனர். இது தவறு. அவனுக்கு விதித்த விதி எது என்று பார்க்கவேண்டும். சாதாரண உயிர்களின் உயிரைக் கவர்வதற்குத் தான் தருமன் செல்லலாம் என்றும், இறையடியார்களாயின் அவர்களைக்கண்டு வணங்கி விலகிச் செல்லவேண்டுமேயல்லாது அவர்களைக் கவர்வது இவனுக்குத் தகாது என்றும், முன்பு இறைவனால் விதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கந்தபுராணம் கூறுகிறது.

''நண்ணருங் கதிபெறும் நமது தொண்டரை
மண்ணுலகத்தவர் மனிதரே யென
எண்ணலை அவர்தமை யாமென் றெண்ணுதி
கண்ணுறின் அன்னவர் கழலின் வீழ்தியால்''

என்பது அக்கருத்தமைந்த பாடல். கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியில் நக்கீரதேவரும் இயமன் கூற்றாகவே கூறுவதும் சிந்தனைக்கு விருந்தாகும்.

''தொழுது நமனும் தன்தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் சீர்காளத்தி மன்னன் — பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்துணையும் சேய்த்தாக என்று''

என்பதுஅப்பாடல். தருமையாதீனம் பத்தாவதுகுருமகாசந்நிதானம் அருளிய தட்சிணாமூர்த்தி திருவருட்பாவில் ''நல்லார்முன் நணுகாத யமதூதர்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்பர் சுவாமிகளும் ஐந்தாந் திருமுறையில் காலபாசத் திருக்குறுந்தொகை என்றே ஒரு திருப்பதிகம் பாடி அதில் இக்கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

''விடைகொள் ஊர்தியினான் அடியார் குழாம்
புடைபுகாதுநீர் போற்றியே போமினே''

''மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னிலொன்று வல்லாரையும் சாரலே

''நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறை நீறணிவார் எதிர்செல்லலே''

என்பன அப்பர் அருள்வாக்குகளாம்.

அடியார் உயிர்கவரும் முறை :

அவன் இவ்விதிக்கு மாறாக இறையடியாராகிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவர முனைந்ததனால் துன்பத்திற்கு ஆளானான். அங்ஙனம் ஆயின் இறையடியார்களின் உயிரைக்கவரவே கூடாதா? என்னும் கேள்வி எழுவது இயல்பு. இறையடியார்களின் உயிரைச் சிவகணங்களை அனுப்பி அவர்களின் தகுதி குறையாத நிலையில் இறைவன் அழைத்து வரச் செய்தருளுவன் என்பது கருத்து. யார் யாரை யார்யார் சென்று அழைத்துவர வேண்டும் என்பது உலகியலிலும் உள்ளது போலவே அருளியலிலும் உண்டு. ஜனாதிபதி, கவர்னர் போன்றோர்களை அழைத்து வரத் தக்கவர்கள் பலரும், சாதாரண தகுதியுடையோரை அழைத்து வர அவர்கட்கேற்ற வேறு சிலரும் செல்வது போலவே இறையடியார்களை அழைத்து வரச் சிவகணங்களும், பிற உயிர்களைக்கவர்ந்து வர எமதூதர்களும் செல்வர் என்பதை அறிதல்வேண்டும்.

தருமபுரம் :

மார்க்கண்டேயரின் உயிரைக் கவர முனைந்த தருமன் ஈசனின் திருவடியால் உதையுண்டு, பூமாதேவியின் வேண்டுகோளுக்கிணங்க

இறையருளால் பின் எழுந்தான். சிவனடியார் மீது பாசம் வீசிய பாவத்தினின்றும் விடுதலைபெற வேண்டினான். இறைவனின் ஆணையின்வண்ணம் திருக்கடவூருக்கு வடமேற்கிலுள்ள வில்வாரண்யத்தில், (இப்போதைய தருமபுரத்தில்) சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூஜித்து அருள்பெற்றான். தருமன் பூஜித்துப் பேறுபெற்றமையால் தருமபுரமாயிற்று. அத்தருமபுரமே நம் ஆதீனம் உள்ள இடமாகும்.

மாதானம் – பெயர்க் காரணம் :

இனி, மாதானம் என்ற இவ்வூரைப்பற்றிச் சிந்திப்போம். இப்பிறவியிலும் முன் பிறவியிலும் செய்த பாவங்கள் போகவும், பேய்க்-கோட்படுதல் போன்ற தீயவினைகள் நீங்கவும் தானங்கள் செய்ய வேண்டும் என்று அறநூல்கள் கூறுகின்றன. திருக்கோயில் பணியினையும் வேள்வியினையும் தங்களின் முழுத்தொண்டாக இயற்றி வரும் அந்தணர்கள் உரிமையுடன் வாழ்தற்கு ஒரு ஊரையே தானமாகக் கொடுத்து அக்கால மன்னர்களும் செல்வர்களும் ஆதரித்துள்ளனர். இங்ஙனம் ஊரையே அளித்த நிலையில் அவ்வூர் மகாதானம் எனப்பெற்று இன்று மாதானம் என்று வழங்கப்பெறுகிறது. மகாதானபுரம் என்ற ஊரும் கும்பகோணம் அருகில் உள்ளது. அந்தணர்களுக்கு ஊர்முழுதும் அளிக்க இயலவில்லையேல் அவர்கள் மகிழ்வுடன் ஒன்றி வாழ்தற்கென ஒரு தெருவை அளித்து ஆதரிப்பதும் உண்டு. இப்படிப்பட்ட மகாதானத் தெரு மயிலாடுதுறையிலும் திருவிடைமருதூரிலும் மற்றும் சில ஊர்களிலும் இன்றும் உள்ளன. பிறர்நலம் பேணும் அந்தணர்களுக்கு அளிக்கப்பெற்ற தானம் மகாதானம், அதாவது சிறந்த தானம் என அழைக்கப் பெற்றுள்ளது. வைத்தீசுவரன் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு ஊர் தரும தானபுரம் என்று அழைக்கப் பெறுகிறது. இது வைத்தீஸ்வரன்கோயில் ஆட்சிக்குட்பட்ட கிராமம். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தால் முன்செய்த வினைகள் நீங்குதற்குத் தானங்கள் பலவும் செய்யப் பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

சகஸ்ர போஜனம் :

தானங்கள் செய்தால் வினைகள் நீங்குமா ? என்னும் கேள்விக்கு விடைகாண வேண்டியது அவசியம். திருமூலர் தம் திருமந்திரத்தில்,

“ அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயம் தானே ”

என்னும் பாடலில் ஆயிரம் அந்தணர்க்கு அகரம் அமைத்துக் கொடுப்பதை விடவும், கோபுரத்துடன் கூடிய திருக்கோயில்கள் ஆயிரம் அமைத்துக் கடவுள் மங்கலம் செய்வதைவிடவும், உண்மை ஞானி எனப் போற்றப் பெறுவோர்க்கு ஒருபகல் உணவு அளிப்பது சிறந்தது என்றருளுகின்றார். அகரம் என்பது இன்று அக்கிரகாரம் என வழங்கப் பெறுகிறது. அந்தணர்கள் வசிக்கும் இடத்தை இது குறிக்கும். அந்தணர் என்போர் என்றும், பிற உயிர்களிடத்துக் கருணையுடன் நடந்துகொள்வோர் என்றும் பொருள்படும். பிராமணர்கள் பெரும்பாலும் நித்திய கர்மானுட்டானங்களைச் செய்து வருவதாலும், வன்முறையில் ஈடுபடாமல் தண்ணளியுடையரா யிருத்தலாலும் அவர்களைக் குறித்தது எனலாம்.

ஞானி என்பவர் ' நடமாடும் கோயில் ' என்று பிறிதோரிடத்தில் திருமூலர் குறிக்கின்றார். சதாசர்வ காலமும் சிவசிந்தனை கொண்டவர் ஞானி எனப்படுவர். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் இயல்புகொண்டவர்கள் அவர்கள். இத்தகையோரை ஒருபகல் பொழுது உண்ணச்செய்வது நாடுமுழுவதும் நலமுறுதற்கு ஏதுவாகும். ஆனால் இத்தகையோரை அறிந்து உபசரித்தல் அரிது ஆதலின் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவு கொடுங்கள்; அவர்களில் ஒருவராவது ஞானியாக இருப்பார்; அவர் வாழ்த்த வினைகள் நீங்கும் என்று நம்பினர். அதனால்தான் 'சகஸ்ர போஜனம்' என்னும் வழக்கம் தோன்றியது.

செவிவழிச் செய்தி :

இங்ஙனம் ஆயிரம்பேருக்கு உணவு அளித்ததன் காரணமாகப் பேய்பிடித்த பெண்ணின் துன்பம் நீங்கியது என்று ஒரு செவி வழிச் செய்தி வழங்கி வருகிறது.

நவாப் ஒருவரின் பெண் பேய்பிடித்த நிலையில் ஆடிக்கொண்டிருந்தாள். அப்பக்கம் ஒரு அந்தணர் ஆசாரசீலராய்வரும்பொழுது அவள்ஆட்டம் நின்றிருந்தது. அதனைக்கண்ட ஒருவன் இச்செய்தியை நவாபிடம் தெரிவித்தான். நவாப் அவ்வந்தணரை அழைத்து விசாரித்ததில் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவு அளித்தால் இவள் நோய் நீங்கும் என்று சொன்னர். அதன்படியே நவாப் செய்ய, பெண்ணின் பேய்க்கோள்பிணி நீங்கியது. அதனைக்கண்ட நவாப் அவ்வந்தணரின் பொறுப்பில் ஒரு கிராமத்தை ஒப்படைத்து அதன்வழி வரும் வருமானத்தைக் கொண்டு ஆயிரம் அந்தணர்களுக்கு ஆண்டுதோறும் உணவு அளிக்க ஏற்பாடு செய்தான். அக்கிராமம் திருச்சிக்கு அருகில் உள்ள நங்கவரம் என்பர்.

இவை அனைத்தையும் ஒருங்கு சிந்தித்துப் பார்த்தால் தானங்களை நெறி தவருமல் செய்து வந்தால் வினைகளின் வழி வரும் துன்பங்கள் விலகும் என்பது ஒருதலை. இந்நம்பிக்கையில் முன்னோர்களால் தானமாக அளிக்கப்பெற்ற ஊரே இந்த மாதானம் என்று அறியலாம்.

ஓர் அற்புதம் :

இத்தகைய வரலாற்று அமைப்புடைய மாதானத்தில் வடகால் துரை எஸ்டேட்டிற்குச் சொந்தமான கோயில் இந்த முத்து மாரியம்மன் திருக்கோயில். அக்குடும்பத்தினர் மிகுந்த சிரத்தையோடு இக்குடமுழுக்கு விழாவை முன்னின்று நடத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இந்த ஊர் மாரியம்மனும் அற்புதத் தெய்வமாக விளங்குவது. 100 ஆண்டுகளுக்கு முன்பு செக்கு செய்வதற்காகப் புளியமரம் ஒன்று துண்டு போடப்பெற்று எடுத்து வரும்போது இந்த இடத்தில் விழுந்துவிட்டதாகவும், இவ்விடத்தில் மாரியம்மன் திருவுருவம் கிடைத்ததாகவும், இங்கு விழுந்த செக்குமரம் இவ்விடத்திலேயே கிளைத்துத் தழைத்து வளர்ந்துள்ளது என்றும் கூறுவது உண்மை என்பதை நேரிலேயே காணுகிறோம். இத்தகைய அற்புதங்களும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க இந்த ஊரில் வாழும் மக்கள் தானங்கள் பலசெய்து துன்பங்கள் நீங்கி இன்புற்று வாழ்வார்களாக!

வாழ்த்து :

தர்ம சிந்தனையுடன் இக்கோயிலை வழிவழியாக நல்லமுறையில் பரிபாலித்து வரும் வடகால்துரைக் குடும்பத்தினரும் இவ்வூர் மக்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தர்மமும் தானமும் தழைத்திடுக!
கர்மமும் கடமையும் கனிந்திடுக!

நாவலரின் நல்லுரை

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றே ஆயினும் தீதே ஆயினும் அதுவே பெரும்பான்மையும் மரணபரியந்தம் அவனைத் தொடரும் ஆதலால் இளமையிலே நற்பழக்கத்தைப் பழகிக்கொள்க.

— சன்மார்க்க போதினி.

திருஞானசம்பந்தர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 7—7—1985 ஆங்கில மாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

இள ஞாயிறு ஒளிவீசிற்று, இன்றுமுதல்ஞாயிறு என்று உணர்த்தியபடி! பத்துமணிக்குள் கடமைகளை முடித்துத் திருமடத்திற்கு வரவேண்டுமே!- விரைந்து கடமைகளை முடித்துப் பத்து நிமிடம் முன்னதாகவே வந்துவிட்டேன். இம்முறையும் ஒரு சிற்பத்தைப் பாரேன் - மனம் இப்படிச்சொல்லிற்று. சிற்பக் கலைக்கூடமாக அல்லவா திருமடம் திகழ்கிறது!

தூணோடு கண்ணும் மனமும் தொடர்புகொண்டன. தெற்கு முகப்பின் உள்ளே மேடையையொட்டிய குதிரை வீரர் சிலை - அதன் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாரதர் புடைப்புச்சிற்பம்! கையில் யாழ்! அமைதியான - நீளமான முகம்; இடையில்பஞ்சகச்சம்; மார்பில் பூணூல்; கழுத்தில் துளபமாலை; நெற்றியில் திருமண்; கையில் யாழ், லயித்து யாழ் இசைப்பது போன்ற தோற்றம் - அடியேன் லயித்துக் கண்டேன்.

மணி பத்து. ஓதுவாமூர்த்திகளின் மகுடவோசை அடியேனை உள்ளே அழைத்தது, குருமணிகள் அன்பர்கட்குத் திருநீறு வழங்கினார்கள்; தேவாரப் பண்ணிசைகள் கூட்டுப்பிரார்த்தனை!

குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள், முதலில் மாதச் சிறப்பு ! ஆனியும் ஆடியுமாக அமைந்தது ஜூலைமாதம் ! ஆனித் திருமஞ்சனமும் சுந்தரர் கயிலைசேர்ந்த ஆடிச் சுவாதியும் அம்மாதத்தில் வருகின்றன. நாம் அந்த நாட்களைப்பற்றிச் சிந்தித்து இறை வழிபாடு ஆற்றிஉய்ய வேண்டும் என்பது குருநாதரின் திருவுள்ளம்.

திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணம் பகுதி அன்றைய அருளுபதேசம்.

" வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் "

எனச் சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் ஒன்றரையடிகளில் குறிக்கின்ருர். இதுபோலவே சண்டேசரையும்

" மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினல் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் "

எனக் குறிக்கிருர். இவ்விரு அருளாளர்களேயும் ஒப்பிட்டுச் சில குறிப்புக்களே உணர்த்தினர்கள்.

இருவரும் வயதிற் சிறியோர்; உணர்வில்பெரியோர்; இருவரையும் சிறிய பெருந்தகையார் எனச் சேக்கிழார்கூறினர். ஞானசம்பந்தரைக் குழந்தையாக இறைவன் ஏற்ருன்; சண்டீசரையும் ஏற்ருன்.

ஞானசம்பந்தரை மகன்மை முறையில்ஏற்ற இறைவன் அருளிப் பாட்டை விளக்கினர்கள். பால்கொடுத்துக் குழந்தையாக ஏற்றமையைப் பற்றிக் குறிப்பிட்டு உடல் வளர்ச்சிக்குப் பால் கொடுத்த தோடு, உணர்வு வளர்ச்சிக்கு ' எண்ணரிய சிவஞானம் ' குழைத்து ஊட்டினர்; சிவஞானம் உண்மை ஞானம். ' உண்மை தருநாதன் ' என ஞானம் வழங்கும் குருநாதனேக் குறிக்கிருர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

ஞானம், உலகியல்அறிவு, ஆன்மஇயல் அறிவுஎன இருவகைப் படும். உலகியல்அறிவு அபரஞானம், ஆன்மஇயல்அறிவு பரஞானம் என விளக்கினர்கள்.

ஞானசம்பந்தருக்கு இறைவன் ஞானப்பால் அருளும் காட்சியை நம்முன் நிறுத்தினர்கள். சீகாழியில், இறைவன் இடபாரூடராய் எழுந்தருள்கிருன். இறைவன் ஞானசம்பந்தருக்குத் திருமுலேப்பால் கொடுக்குமாறு சொல்ல அம்பிகை கொடுக்கிருள். அப்பன் கொடுக்கச் சொல்ல அம்மை அருளினள். அம்மை பால் கொடுத்து ஆட்கொண்டமையால் ஞானசம்பந்தர் ஆளுடையபிள்ளே என வழங்கப்பெற்ருர்.

ஞானசம்பந்தருக்கு இறைவன் பால்கொடுத்து ஆட்கொண்டது போலவே சண்டீசருக்குக் கொன்றைமாலே சூட்டி ' உமக்கு அடுத்த தாதை நாம் ' என மகன்மை கொண்டார் - என ஒப்பிட்டார்கள்.

இறைவன் அனைத்துயிர்க்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்குபவன்; 'ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய்' என்பதுஅப்பர் வாக்கு.

ஞானசம்பந்தர் பொய்கைக் கரையில் ! தந்தையார் சிவபாத இருதயர் பொய்கையில் நீராடி அகமருஷனஜபம் செய்தார். குழந்தை ஞானசம்பந்தர் அழுதார். அவர் அழுதருளியமையைச் சேக்கிழார்,

" ...

" கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமபழு தருளினர் "

எனப் படம்பிடித்துக் காட்டினர். சேக்கிழாரின் இப்பாடலுக்குக் குருநாதர் தந்த விளக்கம் சைவ சித்தாந்தச் செந்நெறி விளக்கமாக அமைந்தது.

கண்மலர் நயன தீட்சையையும் கைம்மலர், பரிசதீட்சையையும் வாய்மலர், வாசிக தீட்சையையும் குறிப்பன என விளக்கிப் 'பைங் குவளைக் கார்மலரால்' எனத்தொடங்கும் திருவெம்பாவைப் பாடலி லும் தீட்சை முறைகள் பேசப்படுதலைச் சுட்டி ஒப்பிட்டருளினர்கள்.

அடுத்து ஞானசம்பந்தரை முருகன் என்ற நோக்கில் ஓர் ஒப்பீட டாய்வு அருளினர்கள். முருகனைச் சரவணப் பொய்கைக் கரையில் கையால் எடுத்தணைத்துக் கந்தன் எனப் பேர்புனைந்து, முலைப்பால் அகத்துள் மகிழ்பூத்து அளித்தாள். சீகாழிப் பெரும் பொய்கைக் கரையில் (பிரமதீர்த்தக் கரையில்) ஞானப்பாலூட்டி ஞானசம்பந் தரை ஆட்கொண்டாள் - இருநிகழ்ச்சிகளும் பொய்கைக் கரையில் நிகழ்ந்தன; ஒன்று சரவணப் பொய்கை, மற்றது பெரும்பொய்கை (பிரமதீர்த்தக் கரை); முருகனுக்கு அம்மை தாமே பாலூட்டினள்; ஞானசம்பந்தருக்கு இறைவனருளப் பொன்வள்ளத்தில் எடுத்தூட் டினள் - என அருளிய அருமைப்பாடு நம் சிந்தனைக்கு நல்விருந்து படைத்தது !

இறையருள் குருவின் வாயிலாகக் கிடைக்கும் என்பதை 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்னும் வழக்கால் உணரலாம். ஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள் குரு. அவர்களால் நமக்கு இறையருள் உண்டாகும். அத்தகைய அருளாளர்களை நாம்மறத்தல் நன்றிமறத்தலாகும். குரு, படிஓலை போலவும், இறைவன், மூலஓலை போலவும் விளங்குகின்றனர். இறைவனைச் சதாகாலமும் நினைத்து வழிபடலே நம்மை உயர்த்திக் கொள்ளும் நெறியாகும் என உபதே சித்தமை அன்பர்களை நெறிப்படுத்துவதாய் அமைந்திருந்தது.

மேலும் ஞானசம்பந்தர் முன்னைத் தவமுடையவராய் விளங்கிப் பஞ்சக்கிருத்திய நாதனையே சதாகாலமும் நினைந்தமையால் பசு கரணம் நீங்கிப் பதிகரணம் பெற்றுப் பஞ்சக்கிருத்தியம் செய்ய வல்லவரானர் எனச் சித்தாந்தச் செந்நெறிவிளக்கம் அருளினர்கள்.

சீகாழிப்பதி ஞானசம்பந்தர் அவதாரத் தலம். அத்தலம் 12 திருப்பெயர்களைஉடையது. பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை வயம், திருக்கழுமலம் என்பன அவை - இங்ஙனம் குறிப்பிட்டகுரு மணிகள் இவைகள் காரணப்பெயர்கள் என்பதையும் சுட்டினர்கள்.

பிரமன் பூசித்தமையால் பிரமபுரம் எனப்பெற்றது. வேணு - மூங்கில். சூரபன்மன் ஆட்சியில் இந்திரன் ஒளிந்திருந்து இங்குப் பூசித்த போது இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றி அருள் செய்தான். எனவே வேணுபுரம் ஆயிற்று.

முருகப்பெருமானைத் தருமாறு தவங்கிடந்த தேவர்கட்குப் புகலிடம் ஆனமையால் புகலி. சுக்கிரன் பூசனையாற்றித் தேவகுரு வுக்குச் சமமான நிலைபெற்றான். எனவே 'வெங்குரு' எனப்பெயர் பெற்றது.

பிரளய காலத்தில் இத்தலம் தோணியாக மிதக்க அம்மை அப்பர் அதனிடை எழுந்தருளி இருந்தனர். ஆதலால் தோணிபுரம் எனவும் இரணியாக்கனைக் கொன்ற வராக மூர்த்தி (திருமால்) பூசனை புரிந்தமையால் 'பூந்தராய்' எனவும் வழங்கலாயிற்று. சிரம் (தலை) என்ற கூறு மட்டும் பொருந்திய இராகு பூசித்தமை யால் 'சிரபுரம்' என்றாயிற்று.

புறவடிவு கொண்டு அக்னிதேவன் பூசித்த பான்மையால் 'புறவம்' எனப்பட்டது. சண்பைப்புல்லால் மாய்ந்த யாதவகுமார ரால் வந்தபழி தொலையக் கண்ணன் பூசித்தமையால் 'சண்பை' எனவும் வழங்கினர்.

காளிங்கன் என்ற பாம்பு பூசித்தமையால் (காளி) காழி என்றும், மச்சகந்தியைக் கூடிய பழிச்சொல் நீங்கும் பொருட்டுப் பராசுரர் பூசித்தமையால் கொச்சை என்றும் உரோமச முனிவர் தம்மலம் போகுமாறு பூசித்து வழிபட்டமையால் கழுமலம் என்றும், பெயர் வழங்கலாயிற்று.

அடுத்து, பகவதி என்னும் சொல்பற்றிய ஆய்வு ஞானசம்பந் தரின் தாயார் பகவதி அம்மையார். பகவன் என்ற சொல்லின் பெண்பாற் சொல். மேலும் பகவன் என்ற சொல்லாட்சியை 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் சான்றுகொண்டு நிறுவினார்கள்.

பகவதி அம்மையார் "அரவணிந்த சடைமுனியார் அடியலால் அறியாதவர்" என்கிறார் சேக்கிழார். "மதுமலர் நற்கொன்றை யான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தன்" எனச்சுந்தரர் சம்பந்தரைக் குறிக்குங்கால் 'அடியலாற் பேணா' எனக் குறித்து அருளியது போலவே சேக்கிழார் பகவதி அம்மையைக் குறிக்கும் போது 'சடைமுடியார் அடியலால் அறியாது' எனக்குறித்தார் - இங்ஙனம் சேக்கிழார் செய்யுட் சிறப்பினை நயம்தோன்றக் குறித்து அம்மையாரின் பக்திமாண்பை விளக்கினார்கள்.

ஞானசம்பந்தர் திருவவதாரம் பற்றியகருத்துக்களை முன்னுரை அமைப்பில் குறித்துச் சிலவற்றுக்கு விளக்கம் அருளினார்கள். வேத நெறி தழைக்கவும், சைவத்துறை விளங்கவும் பூதபரம்பரை பொலி

யவும் சம்பந்தர் அழுதருளினர் எனச் சேக்கிழார் குறிப்பார். ' பூத பரம்பரை பொலிய ' என்னும்தொடரை இனிதுவிளங்கும் வண்ணம் உபதேசித்தார்கள்.

' பூதபரம்பரை பொலிய ' என்பதன் பொருள் உயிரினங்கள் செழிக்க என்பது. தாவரம் முதல் மனிதர் வரையுள்ள வடிவம் அனைத்தும் பஞ்ச பூதங்களால் ஆனவை. பஞ்ச பூதங்களாலான உடம்பைக் கொண்டு இயங்கும் உயிர்கள் பூதபரம்பரை எனப்படும். நுட்பம் தன்மாத்திரைகள். அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற் றம்என்பன. பருப்பொருளாகக்கூறினல்பஞ்சபூதம்;இந்நுட்பத்தினை உணர்தல் நம்கடமை - இங்ஙனம் இனிய விளக்கம் அருளினர்கள்.

ஞானசம்பந்தர் அவதாரத்தினைப் பற்றிச் சேக்கிழார் அருளிய ' சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்க ' என்ற தொடரைக் கொண்டு சைவம் முதல் - அடுத்ததே வைதிகம் என்ற நிலையில் அவதாரம் பேசப்படும் குறிப்பைக் குறித்தார்கள்.

ஞானசம்பந்தர் ஆதிரை நாளில் அவதரித்தார். இறைவன் ஆதிரை நாளுகந்தான். அருக்கன் (சூரியன்) முதலிய கோள்கள் உச்சமான காலம். ஒளியுடையவன் உச்சமாக இருக்கும் காலத்தில் தோன்றினர் ஞானசம்பந்தர். அதனல்,சோதிட நெறியில் கூறினல் வாக்குச்சாதுர்யம் சிறப்பாகவிளங்கும். பலநன்மைகள் உண்டாகும். இறைவன் இத்தகைய நேரத்தில் ஞானசம்பந்தர் அவதரிக்க அருளினர் - எனச் சிறப்பான முறையில் அளித்தவிளக்கம் மனத்தை ஈர்த்தது.

ஞானசம்பந்தர் அவதாரத்தைச் சேக்கிழார் 19 காரணங்கள் கூறி விளக்கினர். 19-ல் இரு குறிப்புக்கள் அகல, ஒழிய எனக் கேடு பற்றியன உண்டு என்பதைக் குறித்தபோது அவர்களின் நுட்பமான ஆய்வு நோக்கைக் கண்டு வியந்தோம். காரணங்களுள் சிலவற்றைக் குறித்தார்கள்.

சாத்திரம், புராணம், திருமுறை, இதிகாசம், செஞ்சொல் விளக்கம், நயவுரைகள்-அத்தனையும் பொருந்தக்குருமணிகள்உபதே சித்தார்கள். உலகியல் எடுத்துக்காட்டுகள் மூலம் விளங்காத பல பகுதிகட்கு விளக்கம் அருளும் அவர்கள் திறம் - அதிலும் பொருத்தமாக அருளும் திறம்- நமக்கு நல்லறிவுபுகட்டி நன்னெறிப் படுத்தத் துணையாகிறது.

வாய்ப்புப் பெற்ற அனைவரும் வளம் பெற்றோம். உபதேசம் நிறைந்தது! அலுவலகத்தார்அன்போடு கனிச்சாறுவழங்கினர்கள். ஆரப்பருகினோம்; விடை கொண்டோம்.

திருஞான சம்பந்தர் திறமுரைக்கும் தருமை வளர்
குருஞான முனிவர் பதம் கும்பிட்டுச் சிறப்புறுவோம்.

வாழ்க குருமணிகள்!

சுதந்திர தேவி துதி

விதந்தரும் இன்னல் எம்மை
விட்டுப்போய் அகன்றே ஏக,
பதந்தரும் நன்மை எல்லாம்
பாரதம் தன்னில் ஆக,
இதந்தரும் உயர்ந்த வாழ்க்கை
எங்கணும் சிறந்து நிற்க,
சுதந்திரதேவி! நின்தாள்
சூழ்ந்துயாம் வணங்கு கின்றோம்! (1)

இந்திய நாட்டு மக்கள்
இணைந்து இனிது இருந்து வாழ,
முந்திய பெருமை எல்லாம்
முளைத்திங்கு மீண்டும் சேர,
புந்தியில் பக்தி, ஞானம்
பூத்துநல் மேன்மை கொள்ள,
சிந்தனைக்கு இனிய தேவி!
சிறந்திட வணங்கு கின்றோம்! (2)

ஒற்றுமை, இணக்கம், அன்பே
இந்நாட்டு மக்கள் பூண,
பெற்றிசேர் தெய்வ பக்தி
பேணியே ஓங்கி வாழ,
உற்றுநல் வானம் பெய்தே
உயர்நிறை வளமை கூட,
பற்றிநின் பாதம் போற்றித்
தேவியே! பரவு கின்றோம். (3)

— "செந்தில்குமரன்"

விஞ்ஞானப் பகுதி :

கதிரவன் குடும்பம்

மூன்று வெளிநிலைக் கோள்கள்

சூரியமண்டலத்தின் இறுதியில் நிற்கும் மூன்று வெளிநிலைக் கோள்கள் யுரேனஸ்(Uranus), நெப்ட்யூன் (Neptune), புளூட்டோ (Pluto) ஆகிய கிரகங்கள் ஆகும். இவையும் சூரியனின் ஈர்ப்புசக்தியால் கவரப்பட்டுச் சூரியனை எக்காலும் சுற்றிவரும் கோள்களாகும். சூரியனிலிருந்து பூமிஉள்ள தூரத்தினைக் கணக்கிட ஓர் அலகாகக் கொண்டால், சூரியனிலிருந்து யுரேனஸ் கிரகம் சுமார் இருபது மடங்கு தொலைவில் உள்ளது. நெப்ட்யூன் சுமார் முப்பதுமடங்கு தொலைவில் இருக்கிறது, புளூட்டோ சுமார் நாற்பது மடங்கு தொலைவில் நிலவுகிறது.

8. யுரேனஸ்

சனிக்கு அடுத்து, கதிரவனைச் சுற்றிவரும் கோள் யுரேனஸ் என்ற கிரகமாகும். தொலைநோக்கி (Telescope) கண்டறிந்தபிறகு ஹெர்ஷல் (Herschel) என்ற விஞ்ஞானி இக்கோளினை 1781 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். இது கதிரவனிலிருந்து 178,21,00,000 (நூற்று எழுபத்து எட்டு கோடியே இருப்பத்தொரு இலட்சம்) மைல் தூரத்தில்உள்ளது. இக்கோளின் குறுக்குஅளவு 32,000 (முப்பத்து இரண்டாயிரம்) மைல் ஆகும். பூமியின் குறுக்கு அளவைவிட இது நான்குமடங்கு பெரியதாகும். இது பூமியைவிட ஐம்பத்து எட்டு மடங்கு அதிகமான பருமனை உடையது. இதனது நிறையோ பூமியின் நிறையைவிட சுமார் பதினன்கு மடங்கு.

யுரேனஸ் பகலவனை ஒருதரம் சுற்றிவருவதற்கு 84 ஆண்டுகள் ஆகின்றன - அதாவது யுரேனஸ் வாசிகளுக்கு ஓராண்டு என்பது நம் ஆண்டினைவிட எண்பத்துநான்குமடங்கு அதிகமாகும். பூமிக்குக் கிடைக்கும் கதிரவனின் ஒளியில் 360ல் ஒருபங்கே இதில்பாய்கிறது. எனவே இக்கிரகத்தில் கதிரவன் வெப்பம் தருவதில்லை - வெறும் வெளிச்சத்தை மட்டுமே தருகின்றன். யுரேனஸ் கிரகத்தின் மேற்பரப்பின் வெப்பநிலை — 190 °C இருக்கவேண்டும் என விஞ்ஞானிகள் கணித்துக் கூறுகின்றனர். இக்கிரகத்தைச் சுற்றிவரும் துணைக் கோள்கள் ஏரியல், அம்பீரியல், டைட்டானியா, ஒபெரான்

ஆகியவை. இத்துணைக்கோள்கள், தொலைப்பார்வையில் சிறு புள்ளிகள் போலமட்டுமே தோன்றுகின்றன. இவை யுரேனஸ்கிரகத்தைக் கிழக்கு - மேற்கு முகமாகச் சுற்றிச் செல்லுகின்றன.

9. நெப்ட்யூன்

கதிரவன் மண்டலத்தில் யுரேனஸுக்கு அப்பால் சுற்றிவரும் கிரகம் நெப்ட்யூன் என்பதாகும். இக்கோளினைப்பற்றி ஒன்றும் அதிகமாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை என விஞ்ஞானிகள் இயம்புகின்றனர். சூரியனுக்கும் இக்கோளுக்கும் உள்ள தொலைவு 279, 35, 00, 000 (இருநூற்று எழுபத்துஒன்பதுகோடியே முப்பத்து ஐந்து இலட்சம்)மைல்கள். இதன்குறுக்குஅளவு 31, 000 (முப்பத்து ஓராயிரம்) மைல்கள். இது கதிரவனை ஒரு முறை சுற்றிவர 165 ஆண்டுகள் ஆகின்றன - அதாவது நெப்ட்யூன் கிரகத்தின் ஓராண்டு என்பது நம் ஆண்டினைவிட 165 மடங்கு அதிகமாகும். நெப்ட்யூனுக்கு ஒரு துணைக்கோள் உண்டு. அத்துணைக்கோளின் குறுக்கு அளவு 3, 000 மைலுக்கு மேலிருக்கும் என விஞ்ஞானிகள் புலப்படுத்துகின்றனர். இஃது அதிவேகமாகக் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றிவருகிறது.

யுரேனஸ், நெப்ட்யூன் என்ற ஒளியற்ற கோள்களை முறையே இராகு, கேது என்ற நிழற் கோள்களாகக் கருதலாம்.

10. புளூட்டோ

1930 ல் நியூட்டனின் பொருட்கவர்ச்சி ஆற்றல் விதியின் (Law of Gravitation) துணைக்கொண்டு டாக்டர் லவல் (Dr. Lowell) என்பார் புளூட்டோ என்ற கிரகத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தார். இக்கோள் கதிரவனுக்கு 366, 50, 00, 000 (முந்நூற்று அறுபத்து ஆறு கோடியே ஐம்பது இலட்சம்) மைல்கட்கு அப்பால் உள்ளதாகும். இஃது ஒரு தடவை கதிரவனைச் சுற்றி முடிக்க 248 ஆண்டுக்காலம் ஆகிறது - அதாவது புளூட்டோ கிரகத்தில் ஓர் ஆண்டு என்பது நமது ஆண்டைவிட 248 மடங்கு அதிகக் காலமுடையது. பூமியின் எடையில் இக்கோள் பத்தில் எட்டுபங்கு தான் எடையிருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதன்குறுக்கு அளவுத் திண்மை, பருமன், எடை முதலியவை பூமியினுடைய வற்றைவிடக் குறைவாகவே உள்ளன. இது பழுப்புநிறம்கொண்டது இதில் காற்றுமண்டலம் கிடையாது. மிகுந்த குளிருள்ளகிரகம் இது.

கதிரவனைச் சுற்றிவரும் கிரகங்கள் - கதிரவன் குடும்பத்தைச் சேர்ந்தவை ஒன்பது என இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோள்கள் மேலும் கண்டுபிடிக்கப்படலாம். இக்கதிரவன் குடும்பத்திலுள்ள கோள்களில் ஒன்றற்கு ஒன்று உள்ள அளவின் வேற்றுமையையும் தொலேவின் வேற்றுமையையும் நம் கற்பனேக்கு அடங்குமாறு ஹெர்ஷல் என்ற விஞ்ஞானி கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

இரண்டு அடிச் சுற்றளவு உள்ள ஒரு பந்தினே நடுவே அமைந்துள்ள கதிரவனுகக் கொள்வோம். இதற்கு 164 அடி தொலேவில் வைத்த ஒரு கடுகே புதன்கிரகம். 214 அடி தொலேவில் அமைந்த பட்டாணிக்கடலேயே வெள்ளிக்கிரகம். 430 அடி தொலேவில்வைத்த மற்றெரு பட்டாணியே வெள்ளி. 430 அடி தொலேவில் வைத்த இன்னுமொரு பட்டாணியே நம் பூமி. 654 அடி தொலேவில் உள்ள ஒரு குண்டூசியின் தலேயே செவ்வாய்க்கிரகம். 1110 அடி தொலேவிலுள்ள 30 சிறிய மணல்துகள்களே நமக்குப்புலனுகும் சிறுகோளத் திரள்கள். ½ மைல் தொலேவிலுள்ள நடுத்தரமான ஒரு கிச்சிலிப் பழமே வியாழன். ¾ கல் தொலேவிலுள்ள ஒருபெரிய கிச்சிலிப்பழமே சனிக்கிரகம். 1½ மைல் தொலேவில் உள்ள ஒரு கொட்டைப்பாக்கே யுரேனஸ். 2½ கல் தொலேவில் வைக்கப்பெற்ற பெரியதொரு கொட்டைப்பாக்கே நெப்ட்யூன். 3¾ கல் தூரத்திலுள்ள ஒரு சிறு கடுகே புளுட்டோ கிரகம்.

இறைவன் படைப்பில் என்ன விநோதம்! இவை ஒன்றிற்கொன்று மோதிக்கொள்ளாமல் போதுமான இடைவெளி அமைந்துள்ளது. கதிரவன் குடும்பக் கிரகங்களே இத்தனேவியப்பை ஊட்டுகின்றன. சூரிய மண்டலத்தைப் போல அண்டவெளியில் எத்தனே எத்தனேயோ? பால்வெளிமண்டலத்தைப் (Milky Nebula) பற்றி நாம் அறிந்தால் படைப்பின் விநோதத்தையும் வானியலின் அமைப்பையும் ஓரளவு அறியலாம்.

கதிரவன் குடும்பம்

முற்றிற்று.

— தொகுத்தளித்தவர் - சுவாமி வீரபாகு.

ஆதாரம் :-

The Captives of the Sun
By James S. Pickering, Newyork.

A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D. Lit., PH. D., D. P. P. A., D. U. N., I. U.,
பருத்தியூர்

(62)

தங்கச் சிலைகொண்டு, தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்டநாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே.

அ. தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மதவெங்கட் கரியுரி போர்த்த செஞ்சேவகன்.

(1) பொன் மலையாகிய மேருமலையினை வில்லாகக் கொண்டு அசுரர்களின் மூன்று புரங்களையும் அழித்தவனும், மதம்பொருந்திய வெம்மையான கண்களையுடைய யானைவடிவான கஜாசுரனை அழித்தவனுமாகிய பெருவீரன் என்று இங்குச் சிவபெருமானைப் புகழ்கிறார்.

(2) 'சேவகம்' என்பது வஞ்சியாது நேருக்கு நேர் நின்று போர்செய்து வெற்றி கொள்வதாகும். நூறுயானைகளை எதிர்நின்று கொல்வது சேவகம் என்று கூறுவர். அவ்வகையில் கஜாசுரன் நூறு யானைகளின் பராக்கிரமம் கொண்டிருந்தான் ஆதலால் அவனைக் கொன்றவீரன் செஞ்சேவகன் எனப் புகழப்பட்டான். சிவபெருமான் அங்ஙனமே பராக்கிரமம் பெற்றிருந்தவர்களான முப்புர அசுரர் களையும் வென்றவன். அவன் உயிர்களைக்காத்தற் பொருட்டுச் செய்தவன். எனவே அவன் செஞ்சேவகன் ஆகிறான்.

(3) "செய்யோய்! மயிலேறிய சேவகனே!" என்பார் அநுபூதியில் அருணகிரியார்.

(4) "தொல்லிலங்கைக் கட்டழித்த சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே?" என்பது சிலப்பதிகாரம்.

(5) மதவெங்கட்கரி என்பது அடங்காப்புலன் ஐந்தையும் குறிப்பதாகும். தேவர்கட்கும், முனிவர்கட்கும், மனிதர்கட்கும் இன்னல் விளைவித்து வந்த யானை வடிவான கஜாசுரன் என்னும் அசுரனை இறைவன் வதைத்து அவனது தோலினை யுடுத்தான். அதுவே 'கரியுரி' ஆயிற்று. இவ்வீரம்விளைத்த இடமே வழுவூர். அவனது எட்டு வீரச்செயல்களில் இரண்டினை இணைத்துக் கூறி அவனைச் செஞ்சேவகன் என்று புகழ்ந்துள்ளார் அபிராமிபட்டர்.

(6) நேர்நின்று போரிடும் வீரம் 'ஆண்மை' எனில், பிறன் மனை நோக்காமை 'பேராண்மை' ஆயிற்று. அங்ஙனமே வீரம் விளைத்தல் அல்லது புறப்பகையினை வெல்லும் செயல் 'சேவகம்'. அகப்பகையாகிய வெங்கட்கரிகளை அடக்கவல்லவன் அல்லது பொறிவாயில் ஐந்தவித்தவனின் ஆற்றல் 'செஞ்சேவகம்' என உயர்த்திப் பேசப்படுகிறது.

ஆ. மெய்யடையக் கொங்கைக் குரும்பைக் குறியிட்டநாயகி.

(1) செஞ்சேவகனாகிய சிவபெருமானது திருமேனியிற்சேரத் தனது திருமுலையாகிய குரும்பையினால் அடையாளம் இட்டத் தலைவி அபிராமியாவாள்.

(2) வெங்கட்கரியுரித்ததின் அடையாளமாக அதன்தோலினை யுடுத்தியிருக்கிறான் இறைவன். அவ்வடையாளம் உள்ள வீரத்திரு மேனியில் கொங்கைக் குறியினைப் பொறித்து விட்டாள் அம்பிகை. கொங்கைகளுக்குத் தென்னங்குரும்பைகளை உவமித்தல் மரபு, கொங்கைகளாகிய குரும்பைகள் என இங்கு உருவகித்தார். திருமுறைகளிலும் இவ்வுவமை எடுத்தாளப்படுகிறது.

(3) காஞ்சியில் அன்னை பூசனை இயற்றும் பொழுது இறைவன் வெள்ளம் காட்டிக் கள்ளம் செய்தான். அஞ்சிய அம்பிகை தான் வழிபட்ட இறைவன் திருமேனிக்கு வெள்ளத்தால் ஊறு நேர்ந்து விடக்கூடாது என எண்ணித் தன்னோடு அத்திருமேனியினை அணைத்துக்கொண்டாள். அன்றுமுதல் அவளது வளைத்தழும்பும், முலைத் தழும்பும் சிவபெருமானது திருமேனியில் பதிந்துவிட்டது. இவ்வரலாற்றினையே "கொங்கைக் குரும்பைக் குறியிட்டநாயகி" என்ற தொடரில் குறிப்பிடுகிறார்.

(4) "கொழும் பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி கொங்கையினை அமர் பொருது கோலங் கொண்ட தழும்புளவே வரை மார்பில்" என்று அப்பர் பெருமான் "தங்கச்சிலை கொண்டு

தானவர் முப்புரம் சாய்த்த '' திருவதிகைத் தாண்டகத்திலேயே குறிப்பிடுதல் ஒப்புநோக்கி மகிழற்குரியது.

(5) மணிவாசகர் திருவாசகத்துள் ' அருள் பத்தில் '

'' துடிகொள் நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடிகொள் வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்கு ஒளிதங்கு மார்பினனே ''

என்கிருர். அதாவது அவளது முலைக் கண்கள் பட்ட சுவடு அழல் போன்ற இறைவன் மேனியில் இரு புள்ளிகள் போல் விளங்குகிறது என்கிருர்.

(6) பெரிய புராணத்தில் '' அகிலமீன்றளித்த மாது மெய்ப் பயன் கொடுப்பவே கொண்டு வளைத்தழும்புடன் முலைச் சுவடு அணிந்தவர் '' என்று குறிப்பிடுகிருர்.

அத்துடன் இறைவன் குழையத் தழுவிய வரலாறு கூறும் பெரியபுராணப் பாடலில் '' கொலைக்களிற்றுரி புனைந்தவர் தம் மேனி குழைந்துகாட்டினர் '' என்கிருர். இங்கும் வெங்கட்கரியுரி போர்த்த வரலாறு குறிப்பிடப்படுதல் சிந்தித்தற் குரியது.

(7) சிவஞான முனிவர் அருளிச் செய்த காஞ்சிப் புராணத்துள் இவ்வரலாறு குழையத் தழுவிய படலத்தில் பேசப்படுகிறது.

(8) உலகில் இன்பநுகர்ச்சி இனிது நடைபெற்று இயங்குதற் பொருட்டே அம்மையார் இவ்வரலாற்றினை நிகழ்த்தினர் என்பது உள்ளடங்கிய தத்துவ உண்மையாகும்.

(9) அபிராமியே காமாட்சி முதலான மூர்த்தி பேதங்களுடன் விளங்குவதாகக் கருதிய அபிராமிபட்டர் இவ்வரலாற்றினை இங்கு நினைவு கூர்ந்தருளினர்.

(10) மலையினைச் சிலையாக வளைத்தல், மதகரியை உரித்தல் ஆகிய பெருஞ்செயல்களைச் செய்த வீரனைச் சிறு குரும்பையனைய தனது திருமுலைகளால் குழைத்துவிட்டாள் என்பது குறிப்பு.

(11) '' பூரிந்தெழுந்த தனங்களோடும் கைவளைகளோடும் ஆலிங்கனம் செய்த (தழுவிய) காரணத்தால் தன் பதியான சங்கரனது சரீரத்தில் அடையாள முண்டாகச் செய்தவளாய் நித்திய யௌவனத்தோடு விளங்கும் பாலாஸ்வரூபத்தை நான் காஞ்சியில் கண்டேன் '' என்கிருர் காஞ்சிமூககவி தனது ஆர்யாசதகத்தில்.

இ. கோகனகச் செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே.

(1) குறியிட்ட அத்தேவியின் செந்தாமரை அனைய திருக் கரத்தில் இருக்கும் கரும்பு வில்லும் மலர்க்கணைகளும் எப்போதும் எனது சிந்தனையில் நிற்கின்றன என்கிறார். (கோகனகம் அல்லது கோகனதம் என்றால் தாமரை மலர்).

(2) மனத்தின் வடிவான கரும்பு, தன்மாத்திரைகளின் வடி வான மலர்க்கணைகள் ஆகியவை எப்போதும் சிந்தையில் இருப் பதால் மனத்தைச் சரியான வழியில் செலுத்திப் புலன்களையும் அடக்க இயலும்.

(3) "கொண்டேன் உள்ளத்து உலகம்ம! நின்நூபுரக்கோ கனகம்" என்று அவளது தாளிணையினைச் செந்தாமரை என்றார் சிங்கை நமச்சிவாயர். அவளது கரமும் சரணமும் அனைத்தும் அம்புயம்தானே!

ஆகம விதிகளின்படி சிவபூஜை செய்யும் வாய்ப்புப் பெறுதல் இப்பாடலின் பாராயணப்பலன் ஆகும். (தொடரும்)

நம் தேவைகள் எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் ஆண்டவனை அணுகிச்செல்கிறோம். தேவைகள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வள வுக்கு அவ்வளவு ஆண்டவனைவிட்டு விலகிப்போகிறோம்.

— சாக்கரெடீஸ்.

செல்வவளம் உடைமை, ஒருவன் வாழ்வில் பாடம் கற்பிக்கும் ஒரு பேராசான்தான். ஆனால் துன்பமுடைமை அதனினும் பாடம் அதிகம் கற்பிக்கும் மகா பெரிய ஆசான் ஆகும். செல்வ வளம் உடைமை மனிதன் மனத்தை மதம்பிடிக்கச்செய்கிறது. ஆனால் இன்மைநிலை அவனை முன்னேற்றுகிறது - அவனுக்குப் பலம் தருகிறது. — ஹேஸ்லெட்.

பளபளப்புச் செய்யப்பட்ட பித்தளையானது, கரடுமுரடான தங் கத்தைவிட மக்களைக் கவர்கிறது. மனித உள்ளம் உண்மையை ஆராய்வதில்லை - பகட்டையும் ஆடம்பரத்தையும்தான் உலகம் விரும்புகிறது. — செஸ்டர்ஃபீல்டு.

பதினொரு திருமுறைகள் - வகுத்த காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. Sc., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் மூன்று தொகுப்புக்கள். திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் மூன்று தொகுப்புக்கள். சுந்தரமூர்த்தி நாயனரின் திருப்பதிகங்கள் ஒருதொகுப்பு. முதல் ஏழு தொகுப்புக்களும் தேவாரங்கள் எனப்படும். அடுத்து மாணிக்கவாசகரின் திருவாசகம், திருவிசைப்பா, திருமூலரின் திருமந்திரம், திருமுகப்பாசுரம் முதலியன, சேக்கிழாரின் பெரியபுராணம் - ஆகத் திருமுறை பன்னிரண்டாக வகுக்கப்பட்டன. எக்காலங்களில், எம்மன்னர்களின் காலங்களில், முதல் பதினெரு திருமுறைகள் வகுக்கப்பட்டன என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம். பன்னிரண்டாம் திருமுறை வகுக்கப்பட்ட காலத்தைத் தனிக்கட்டுரையில் ஆய்வோம்.

பதின்மூன்றும் நூற்ருண்டின் கடைப் பகுதியில் வாழ்ந்தவர் உமாபதி சிவாசாரியர். அவர் திருமுறைகண்ட புராணத்தையும், சேக்கிழார் நாயனர் புராணத்தையும் இயற்றியவர். அப்புராணங்களில் பதினெரு திருமுறைகள் வகுக்கப்பட்டதையும், பிறகு பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டதையும், விரிவாய் எடுத்துரைப்பார். உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்ததையும், சரித்திர வரலாற்றினையும், கல்வெட்டுக்களில் காணப்படும் செய்திகளையும் ஒப்புநோக்கித் திருமுறைகள் வகுக்கப்பட்ட காலத்தைக் காண்போம்.

திருமுறைக்கண்ட புராணம் :

திருமுறை கண்ட புராணத்தில் உமாபதி சிவாசாரியர் கூறுவதாவது : 1

அலகில் புகழ் இராசராசன் - அபயகுலசேகரன் என்பான் மூவர் முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனர் ஆகியோர்அருளிச்செய்த பதிகங்களைத்தொகுக்கவேண்டும்

அடிக்குறிப்புக்கள் :
S. I. I. South Indian Inscriptions Volumes.
A. R. E. Archaeological Report on Epigraphy.
E. I. Epigraphia Indica Volumes.

1 உமாபதி சிவாசாரியாரின் திருமுறை கண்ட புராணம்,

என்று விரும்பினன். தனது விருப்பத்தைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியிடம் தெரிவித்தான். திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரான விநாயகரின் அருளால், மூவர் முதலிகளின் திருப்பதிகங்கள் தில்லைநடராசப் பெருமான் கோயிலில் இருப்பதை அறிந்தனர். இறையருள் கூடிற்று. திருப்பதிகங்களைக்கண்டு எடுத்தனர். சில சுவடிகள் செல்லரித்துப் போயிருந்தன. கிடைத்தவற்றைக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளை வகுத்தார். அவைகளில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களும், திருநாவுக்கரசரின் திருப்பதிகங்களும் இவர்களுக்குப் பின்னல் அவதரித்த 2 சுந்தரரின் பதிகங்களும் இருந்தன. ''வேதச் சைவ நெறித் தலைவர் மூவர் பாடல்களை'' நம்பியாண்டார் நம்பி ஏழாகத் தொகுத்தார்.

(1) திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகச் செய்யப்பட்டன.

(2) திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகச் செய்யப்பட்டன.

(3) சுந்தரரின் திருப்பதிகங்கள் ஏழாவது திருமுறையாகச் செய்யப்பட்டது.

சைவ உலகில் இவ்வேழு திருமுறைகளும் தேவாரங்கள் எனப்படும். நம்பியாண்டார் நம்பி தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டார். மாணிக்கவாசகரின் திருவாசகத்தை எட்டாகவும், திருவிசைப்பாவை ஒன்பதாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாகவும், திருமுகப் பாசுரத்தை பதினொன்ருகவும் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனர் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையை விரிவாக்கி, கலித்துறையில் திருத்தொண்டர் அந்தாதி இயற்றினர். இக்கலித்துறை அந்தாதியைப் பதினொன்ருவது திருமுறையாகிய திருமுகப்பாசுரத்தில் சேர்த்தார் 3. இச்செய்திகளை வரலாறு, கல்வெட்டுக்கள் ஆகியவைகளுடன் ஒப்புநோக்குவோம்.

இராசராச மன்னன் என்று உமாபதி சிவம் குறிப்பிடுவது முதலாம் இராசராசசோழனே. இம்மன்னன் கி. பி. 985 - இல் கர்க்கடக மாதத்தில் புனர்வசு நக்ஷத்திரத்தில் முடிசூடியவன் 4.

---

2 திருமுறை கண்ட புராணம் பாடல் - 16.

3 மேற்படி புராணம் பாடல் - 21.

4 N. Sethuraman - " Early Cholas " page - 81.

இராசராசன் தஞ்சைப் பெரு உடையார் கோயிலை எடுப்பித்தான். இம்மன்னனது கல்வெட்டுக்கள் பல இவ்வாலயத்துள் உள்ளன. ஒரு கல்வெட்டு - ஸ்ரீ விமானத்தின் ஸ்தூபியின் மீது செப்புக்குடம் வைத்த நாளைக் குறிப்பிடுகிறது. அந்நாளே குடமுழுக்கு விழா நடந்தநாள் எனலாம்.

"யாண்டு இருபத்தஞ்சாவது நாள் இருநூற்று எழுபத்தஞ்சினல் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கச் செப்புக் குடம் ஒன்று ......" என்று கூறிச் செல்கிறது கல்வெட்டு 5.

இராசராசனின் 25-ஆம் ஆண்டு கி. பி. 1009 இல் ஆடிமாதம் புனர்வசுஅன்று தொடங்குகிறது. அந்நாள் ஜூலை மாதம் 22-ஆம் தேதிஆகும்6. இதிலிருந்து 257-ஆம் நாளைக்கணக்கிட்டால்அந்நாள் கி. பி. 1010 ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதியாகும். அன்றே செப்புக் குடம் ஸ்ரீ விமானத்தின் மீது வைக்கப்பட்டது. அந்நாள் கி. பி. 1010 சித்திரை மாதம் 31-ஆம் தேதி சனிக்கிழமை ஆகும். அன்று புனர்வசு நக்ஷத்திரம் திகழ்ந்தது. முதல் குடமுழுக்கு அன்று நடந்தது.

இக்கோயிலில் உள்ள வேறு ஒரு கல்வெட்டில் 7, மன்னனின் 29-ஆம் ஆண்டு வரை (1014) பொய்கை நாடு கிழவன், ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் என்பான் எழுந்தருள் வித்த ஏழு செப்புச்சிலைகள் குறிப்பிடப்படுகின்றன. அச்சிலைகள் வருமாறு :-

1. நம்பி ஆரூரர் (சுந்தரர்)
2. நங்கை பரவையார் (சுந்தரரின் மனைவி)
3. திருநாவுக்கரசர்
4. திருஞானசம்பந்தர்
5. பெரிய பெருமாளான இராசராசதேவர்
6. இராசராசரின் பட்டத்து அரசியான ஒலோகமாதேவியார்.
7. பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக நாலு திருக்கைகளும் உடையவராகக் கனமான பித்தளையால் எழுந்தருள்வித்த

---

5. S. T. T. II NO. 1 fifth section line 1.

6. Swamikkannu Pillai - an indian ephemeris volume III. [page 21.

7. S. I.I II No. 38.

சந்திரசேகரர் திருமேனி. (மனிதர்களின் சிலைகளை ப்ரதிமம் என்றும், இறைவனின் சிலையைத் திருமேனி என்றும் கல்வெட்டில் கூறப்பட்டு உள்ளது.)

''பெரிய பெருமானுக்குத் தேவார தேவராக நாலு திருக்கைகள் உடைய சந்திரசேகரராகிய பிறைசூடி பெருமானின் திருமேனி'' வைக்கப்பட்டது என்னும் செய்தி சிந்தனைக்கு உரியது. இந்தக் கல்வெட்டில்தான் முதன்முதலாகத் தேவாரம் என்ற சொல் கையாளப்படுகிறது. இராஜராஜன் காலத்திற்கு முன்பும் கோயில்களில் மூவர் முதலிகளின் பாடல்களைப் பாடுவது உண்டு. ''பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக் கும்பிட்டுக்கூத்துமாடி'' என்று அப்பர் பெருமானும் கூறுவர். கல்வெட்டுச் சான்றுகள் நிறைய உள்ளன. அவைகளில் திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என்றுதான் சொல்லப்பட்டுள்ளன.

வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவல்லம் தலத்தில் உள்ள பில்வனதேச்வரர் ஆலயத்தில் இரண்டாம் நந்திவர்மனின் 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது 8. இதன் காலம் கி. பி. 841 ஆகும். இதில் திருப்பதியம் உள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நிவந்தங்கள் அளித்ததாகச் சொல்லப்பட்டு உள்ளது. லால்குடி திருத்தவத்துறை சப்தரிசிடிஸ்வரர் ஆலயத்து-பராந்தக சோழனின் 37-ஆம் ஆட்சி ஆண்டு கி. பி. 944-க்கு உரிய கல்வெட்டில் திருப்பதியம்விண்ணப்பித்தல் கூறப்படுகிறது9. திருவெறும்பியூரில்உள்ள சுந்தரசோழனது மூன்றும் ஆட்சி ஆண்டு 960-க்கு உரியகல்வெட்டில் திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் கூறப்பட்டுள்ளது 10. திருவாவடுதுறையில்உள்ளஉத்தமசோழனின்மூன்றும்ஆட்சிஆண்டு கி. பி. 974-க்கு உரிய கல்வெட்டில் திருப்பதியம் பாடுவான்ஒருவன் குறிப்பிடப்படுகிறன்11. திருவெறும்பூரில் உள்ள உத்தமசோழனின் 15-ஆம்ஆண்டு 986-க்கு உரிய கல்வெட்டில் திருப்பதியம்பாடுவான் ஒருவனுக்கு நிலங்கள் காணியாகக் கொடுக்கப்பட்டு இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது 12. இவ்வாறு திருப்பதியம் பாடுதல், விண்ணப்பம் செய்தல் என்றதொடரே ராஜராஜனின் காலத்திற்கு முன் உள்ள கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. ஆனால் இராசராசனின் தஞ்சாவூர் கல்வெட்டில் தேவாரம் என்ற சொல் முதன் முதலாகச்சொல்லப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் யாண்டு 29-வரை

8 S. I I III No. 43.
9 A. R. E. 99/1928-29.
10 A. R. E. 129/1914.
11 S. I. I. XIX NO. 69.
12 S. I. I. XIX NO. 372.

அதாவது கி. பி. 1014 வரை வைக்கப்பட்ட ஏழு சிலைகளில் ஒன்று இராசராசனின் தேவார தேவரான சந்திரசேகரர்ஆகும். கோயிலின் குடமுழுக்கு விழா 1010-இல் நடந்தது என்பதனை முன்பே கண்டோம். எனவே தேவாரம் என்ற சொல் 1010-இலிருந்து 1014க்குள் கையாளப்பட்டு இருக்க வேண்டும். மூவர் முதலிகளின் தேவாரங்களைத் ஏழு திருமுறைகளாகத் தொகுத்தவர் நம்பியாண் டார்நம்பி ஆவர். எனவே தேவாரங்கள் திருமுறைகளாகத்தொகுக் கப்பட்ட காலம் ராஜராஜனின் ஆட்சியில் 1010லிருந்து 1014-க்குள் எனலாம். பெரிய பெருமாளான இராஜராஜனும் தேவாரம் பாடு வான் என்னும் இனிய செய்தியும் இக்கல்வெட்டால் அறியக்கிடக் கிறது. சேக்கிழார் புராணத்தில்,

ஆயமறை மொழி நம்பியாண்டார் நம்பி
அருள் செய்த கலித்துறை அந்தாதி தன்னைச்
சேய திருமுறை கண்ட ராசராச
தேவர் சிவாலய தேவர் முதலாயுள்ளார் ...
...... பாராட்டினர் ...

என்றுஉமாபதிசிவமும்கூறுவர்13. தேவாரங்களைத்திருமுறைகளாக வகுத்த காரணத்தால் மன்னனும் திருமுறை கண்ட இராசராசன் என அழைக்கப்பட்டான். சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை நம்பியாண்டார் நம்பி விரிவுபடுத்திக் கலித்துறைஅந்தாதி என்னும் திருத்தொண்டர் அந்தாதி செய்தார். இதனை இராசராசனும் கேட்டுள்ளான் என்பதை மேலே உள்ள பாடலால் அறியலாம். இதன் காரணமாக ''நம்பிஆரூரரின் சிலையும் பரவைநங்கையாரின் சிலையும்'' முதல் இடம்பெறுகின்றன. அடுத்து, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் சிலைகள் வைக்கப்பட்டன. இவ்வரிசையில்தான் மூவர் முதலிகளும் கலித்துறை அந்தாதியில் இடம் பெறுகின்றனர். இக்கலித்துறை அந்தாதியைக் கேட்டபிறகு, இராசராசன் சுந்தர மூர்த்தி நாயனாரின் வரலாற்றை ஓவியத்தில் வடித்தான்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கர்ப்ப இல்லத்தின் பின் புறத்தில் இராஜராஜன் காலத்து ஓவியங்கள் உள்ளன. இதில் சுந்தரரின் வரலாறு அழகாகப் பல வண்ணங்களில் தீட்டப்பட்டு உள்ளதை இன்றும் காணலாம். சுந்தரரை இறைவன் தடுத்தாட் கொண்டது, சுந்தரர் வெள்ளையானையின்மீதுசெல்வது, தொடர்ந்து சேரமானும் குதிரையின் மீது கைலாயம் செல்வது, கயிலாயத்தில் தேவர்களும் முனிவர்களும் எதிர்கொண்டு அழைக்க (திரு நொடித் தான் மலைத்திருப்பதிகத்தில் உள்ளபடி) இறைவன் சுந்தரரை அன்புடன் ஏற்பது போன்ற காட்சிகள் அருமையிலும் அருமையாக வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன.

---

13. உமாபதி சிவாசாரியார் - சேக்கிழார்புராணம் பாடல் - 24.

இராஜராஜனே சந்திரசேகரர் முன் நின்று தேவாரம் பாடி உள்ளான். கோயிலிலும் தேவாரப் பாட்டுக்கள் பாட 48 - ஓதுவார் கள் நியமனம் செய்யப்பட்டனர் என்று மற்ரெரு கட்வெட்டுக் கூறு கிறது. 14 ஓதுவார்களின் பெயர்கள் சிவன் என்ற முடிவைக் கொண்டுள்ளன. (பூர்வசிவன், தர்மசிவன், ஞானசிவன், சதாசிவன், நேத்திரசிவன் என்பன போல.)

இராஜராஜனின் காலத்தில் மாணிக்கவாசகரின் சிலை வைக்கப் படவில்லை. மாணிக்கவாசகரின் திருவாசகம் எட்டாம் திருமுறை யாக - இராஜராஜனின் மகன் இராசேந்திர சோழனின் காலத்தில் செய்யப்பட்டது. இதனைப் பின்னல் பார்ப்போம். ஏழுத்திருமுறை கள் வகுத்தபிறகு இராஜராஜன் மறைந்துவிட்டான். இதனைத் திருமுறை கண்ட புராணத்தில் மறைமுகமாகக் காணலாம். உமாபதி சிவமும் கீழ்க்கண்ட பாடலில் கோடிட்டுக் காட்டி விடுகிருர். 15

மன்னன் தானும் எழின் முறையை
முன்போல் வகுக்க எண்ணி ....
......வகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூயமனுவெழு கோடி யென்பதுன்னித்
தன்னிகரில் திருவருளான் மன்னன் ருனும்
தாரணியோர் வீடுபெறும் தன்மை சூழ்ந்தே

பதிெனரு திருமுறைகள் வகுக்கப்பட்டதைக் கூறும்போது மீண்டும் ஒருமுறை 7 - திருமுறைகள் முன்பு வகுக்கப்பட்டதையும் தொகுப்பினையும் கூறி, பிறகு நான்கு சேர்க்கப்பட்டதையும் கூறு கிருர். இதனுல், அடுத்த நான்கு திருமுறைகள் இராஜராஜன் காலத்திற்குப்பின் வகுக்கப்பட்டன என்பதை அறியலாம். அது இராஜராஜனின் மகனுகிய இராசேந்திர சோழனின் காலத்தில் நிறைவேறியது. இக்கருத்துக்குத் துணைபுரியும் சான்றுகளைக் காண்போம்.

இராஜராஜன் கி. பி. 1012 - இல் ஆனிமாதம் மிருகசீரிடம் திகழ்ந்த நன்னுளில் தன்மகன் இராசேந்திர சோழனுக்குப் பட்டம் கட்டினன். 16 கி. பி. 1014 - இல் இராஜராஜன் மறைந்தான். இராசேந்திரன் சோழ மாமன்னன் ஆனன். (தொடரும்)

14. S. I. I. II No. 65;
15. திருமுறை கண்ட புராணம்
16. N. Sethuraman - " The Cholas " Page 4.

சிவஞானமுனிவரின் பேருரைத் திறன்

டாக்டர் ஆ. ஆனந்தராசன்

பேராசிரியர்,

சைவசித்தாந்தத்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

கி. பி. பதினேந்தாம் நூற்றாண்டு முதல் சைவ சித்தாந்தத் துறையை விளக்கப் பல உரைகாரர்கள் தோன்றினர். அவர்களுள் பாண்டிப்பெருமாள், மறைஞானசம்பந்த தேசிகர், நிரம்பவழகிய தேசிகர், ஞானப்பிரகாசர், வெள்ளியம்பலவாணமுனிவர், சிவாக்கிர யோகிகள், மதுரைச் சிவப்பிரகாசர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் கள். இவ்வுரைகாரர்களுக்கெல்லாம் காலத்தாற் பிற்பட்டவர் சிவஞானமுனிவர். அவர் உரை சைவசித்தாந்த உலகின் தனிப் பெரும் ஞாயிறாக விளங்கிவருகிறது. சித்தாந்தப்பொருளில் ஏற்படும் ஐயத்தைத் தீர்த்துத்தெளிவு காண்பதற்குச்சிவஞானமுனிவரையே நாடவேண்டியுள்ளது.

வடமொழியில் உள்ள வேதாந்தசூத்திரத்திற்குச் சங்கரராலும், இராமாநுசராலும், மத்துவராலும், நீலகண்டராலும் பாடியங்கள் இயற்றப்பட்டிருப்பதுபோலச் சிவஞான போதத்திற்குத் தமிழ் மொழியில்சிவஞானமுனிவரால் பாடியம் வரையப்பட்டுள்ளது. அது 'திராவிட மாபாடியம்' என்று வழங்கப்படுகிறது. அது வேதாக மங்களையும், உபநிடதங்களையும், பன்னிருதிருமுறைகளையும், திருக் குறள் முதலிய நூல்களையும் தழுவித் திட்ப நுட்பம் செறியஇயற்றப் பட்டதாகும்.

சிவஞான முனிவர் இப்பேருரையே யன்றிச் சிற்றுரையும், சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரையும் செய்துள்ளார். தம் பேருரையை உணர்ந்து கொள்ளுவதற்குக் கருவியாகவே தொல் காப்பியச் சூத்திர விருத்தியையும், சங்கரநமச்சிவாயர் எழுதிய நன்னூல் விருத்திக்குப் புத்தம் புதியவுரையும் செய்துள்ளார். சாத்திரம் கற்போர்க்குத் தருக்க நூலறிவு இன்றியமையாதது என்பதை உணர்ந்தே 'தருக்க சங்கிரகம்' என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார் எனக்கொள்ளலாம். சிவஞான முனிவர் மொழி பெயர்ப்பதில் வல்லவர். காஞ்சிப்புராணத்தில் அவரது மொழி பெயர்ப்புத் திறனை மிகுதியும் காணலாம். சர்வாத்ம சம்பு சிவாசாரியர் இயற்றிய சித்தாந்தப் பிரகாசிகை, அரதத்த சிவாசாரியர் இயற்றிய சுலோக பஞ்சகம், அப்பைய தீட்சிதர் இயற்றிய சிவதத்துவ விவேகம் என்னும் வடமொழி நூல்களை

அருமையாக மொழி பெயர்த்துள்ளார். இளம்பிள்ளைகள் பயின்று, சிவ நெறியில் சிறந்து விளங்கும் பொருட்டு அந்தாதி, பிள்ளைத் தமிழ் முதலிய சிறு பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்.

சிவஞான முனிவரது பேருரையின் சாரமாகப் பின் வரும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுதல் அமைவுடையதாகும்.

(1) ஆன்ம சிற்சத்தியே பிரமாணம் என்றும், பிறர் கூறும் பிரமாணங்கள் உபசாரத்தால் அவ்வாறு கூறப்படுமேயன்றி உண்மையிற் பிரமாணங்கள் ஆகா என்றும் வலியுறுத்துகிறார். வழி யளவை, ஆகம அளவையோடு முரணாது என்றும், ஆகமப் பொருள் களைச் சிந்தனை செய்து வன்மை மென்மைகளை உணர்ந்துகொள்வு தற்கு வழியளவை இன்றியமையாதது என்றும் சிவஞான முனிவர் உணர்த்துகிறார். உலகாயதர், பௌத்தர், தார்க்கிகர் முதலியோர் கொள்ளும் அளவைகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி யுள்ளார்.

2. உலகாயதர், மீமாஞ்சகர், பௌத்தர், சமணர், சாங்கியர், அநேகேசுர வாதிகள் முதலியோரை மறுத்து, உலகம் உள்பொருள் என்றும், செயப்படு பொருள் என்றும். அதனைச் செயற்படுத்துதற்கு ஒரு முதற்கடவுள் வேண்டும் என்றும், அம் முதற்கடவுள் சங்கார காரணனாகிய சிவபெருமானே என்றும் நிறுவி மெய்கண்டாரது உட் கிடையைத் தெளிய உரைத்துள்ளார்.

3. அத்துவிதம் என்ற சொல்லைக் குறித்து வைதிக சமயத் தாரிடையே கருத்து வேறுபாடு பெரிதும் காணப்படுவதால் அவர்களை மறுத்து அதன் உண்மைப் பொருளை மெய்கண்டார் வழி நின்று விளக்கியுள்ளார்.

4. சத்து, சித்து என்பவற்றிற்குரிய சித்தாந்தப் பொருளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

5. ஆருகதர், சாங்கியர், நையாயிகர், பாஞ்சராத்திரிகள் முதலியோர் உயிரியல்பு பற்றிக் கூறும் ஒவ்வாத கொள்கைகளை மறுத்துச் சைவசித்தாந்த முறையில் உயிரின் பொதுவியல்பு, சிறப் பியல்புகளை விளக்கிக் காட்டி யுள்ளார்.

6. மாயை அநிர்வசனப் பொருள் என்றும் உலகம் உண்மையில் இல்லாதது என்றும் கூறும் மாயாவாதிகளின் கொள்கையை மறுத்து, மாயை உள்பொருள் என்றும் உலகம் மெய்ப்பொருள் என்றும் நிலைநாட்டி, சித்தாந்தத்தில் மாயைக்குக்

கூறப்படும் இலக்கணங்களைத் தெளிவுறுத்திக் கூறியுள்ள கருத்துக்கள், சிவஞானமுனிவர் சித்தாந்த நெறிக்கு அளித்துள்ள சிறந்த பொருட் கொடைகளாகும்.

7. சிவம் முதல் நிலம் ஈருக உள்ள ஐந்தும், ஏழும், இருபத்து நான்குமாகிய முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றமுறைமையினை விரிவாக ஆராய்ந்து விளக்கி யுள்ளார். அவ்வத் தத்துவங்களின் உண்மைக்குப் பிரமாணம் காட்டுதல், ஒவ்வொரு தத்துவத்திற்கும் இலக்கண வரையறை தருதல், தத்துவங்களின் பெயர்க் காரணத்தைச் சுட்டுதல், அவ்வத்தத்துவங்களின் தொழிற்பாடுகளைஉணர்த்துதல், உரிய இடங்களில் பிற சமயக் கருத்துக்களை மறுத்தல்ஆகிய அடிப்படைகளைக் கொண்டு அவர் ஆராய்ந்துள்ளார் என்பது புலனுகிறது.

8. உண்மையியலில், இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம், பசுபுண்ணியம் சிவ புண்ணியங்கள் ஆகியவைபற்றி விளக்கியுள்ளார்.

9. ஞானச் செய்தியைப் பத்துவகையில் வைத்து உணர்த்தும் முறையாகிய தசகாரியங்களைச் சிவஞானமுனிவர் தம் உரையிடையே நுட்பமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

முடிவுரை:

தொடக்க முதல் இறுதி வரை முன்னெடு பின் முரணின்றிச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்கிச் செல்லும் பான்மையைச் சிவஞான முனிவரது பேருரையிற் கண்டு மகிழலாம். சித்தாந்தச் செம்பொருளை உணர்ந்து கொள்வதற்கு அவரது உரையே வழிகாட்டியாக உள்ளது என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

பிரார்த்திக்கும் ஒரு ஜோடி திருக்கரங்கள், நாடாளும் மன்னர்களினும் வீரப்போர்செய்து வெற்றிகண்ட வீரர்களினும், அதிகசக்தி வாய்ந்தது.

— சிவானந்தர்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம், ஃபில்.,

(மலர் 44, இதழ் 8, பக்கம் 650 இன் தொடர்ச்சி)

9. ஸ்ரீ காசி பாகீரதியம்மை திருவருட்பா

சீர்வாழ் கருணை பொழி விழியும்
சிறந்த கமல மலர்முகமும்
செவ்வாய் நகையும் இருகாதும்
செம்பொற் றோடுங் கருங்குழலும்
பேர்வாழனந்த மதியொளி போற்
பெருகு ஞானத் திருவுருவும்
பெரிதாம் அபய கரதலமும்
பிரியா வரத கரதலமும்
நீர்வாழ் கும்ப மொரு கரமும்
நிறைநீர் பொழிந்த கரதலமும்
நின்றே யிலங்கு முனைப்பணிய
நினைந்தே யிருப்பேன் முன்வருவாய்
ஏர்வாழ் காசி வளத் தாயே
யீரே ழுலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
எனையாள் பாகீரதித் தாயே. (1)

(பொ-ரை) சிறப்பொடு வாழ்வதற்கான கருணைபொழி விழியும், அழகானதாமரைமலர் முகமும், சிறந்த வாயின் புன்னகையும், இருகாதும் அதில் விளங்கும் செம்பொற்றோடும், கரிய குழலும், எண்ணற்ற பேர்கள் வாழஉதவும் மதியொளிபோல் பெருகு ஞானத் திருவுருவும், பெருமைமிகு அபயகரமும், பிரியாத வரதகரமும், நிறை நீருடைக் கும்பந்தாங்கிய கரமும், நீரைப் பொழியும் கரமும் கொண்டு விளங்கும் உனைப்பணிய நினைந்தே இருக்கும் என்முன் வருவாய். காசியின் அழகு வளர்வதற் காதாரமானவளே! பதினான்கு உலகையும் பெற்றவளே! எல்லா உயிர்களையும் வளர்த்தவளே! என்னையும் ஆட்கொள்க பாகீரதியம்மையே.

(கு-ரை) முகத்தைச் சொல்லியே கண்ணைச் சொல்லவேண்டும் ஆனாலும் முகத்தில் - கருணை பொழிவிழிகளே சிறந்தவையாதலால் அவற்றை முதலில் குறித்தார். 'முகத்தில் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன் முக்கண முறையோ' - (சுந்தரர் 7-54-9) சிறந்த கமலம் - திருவளர் தாமரை. திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை - நோக்கம். திருமகள் தங்குந் தாமரைஎனினுமமையும். (திருக்கோ - 1) 'பூவெனப்படுவது பொறிவாழ்பூவே' (நால். நான். 40.) பேர்வாழனந்த - என்பதை அனந்த பேர்வாழ - என மாற்றிக்கூட்ட - பொருள்சிறப்புத் தோன்றுகிறது. ஏர்வாழ்காசி வளத்தாயே 'கங்கைநதி யானந்த..................கல்யாணகுணதரு வெனுங் காசிதழையவே' - என்று முன்னும் (7 - 1) கூறியதை நினைக்க.

தேசு, மதி போல் மெய்யொளியுஞ்
சிறந்த முகமும் விழிமூன்றும்
தேனர் வெண்டா மரைத்தாரும்
திகழும் தரள மணியும் வெ(ள்)ளைத்
தூசுங் கைமா துளங் கனியுந்
துலங்கு நீல வலக் கரமும்
துணைப்பொற் கரஞ்சே ரஞ்சலியுஞ்
சொலும்பன் னிரண்டு வயதுமாய்க்
காசி மணிகன் னிகையுடனே
கங்கை யுன்னைத் தியானிப்பார்
கவின்சேர் வார ணசியெல்லை
கடவா ரன்றே பிறப்பறுப்பார்
ஈசர் சடைமே லிருந்தாயே
யீரே ழுலகீன் றெடுத்தாயே
எல்லா உயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (2)

(பொ-ரை) பிரகாசமுடைய மதி போலத்திருமேனியொளியும், சிறந்த முகமும், கண்கள் மூன்றும், தேன் பொருந்திய வெண் தாமரைமலர் மாலையும், விளங்கும் முத்துமாலையும், வெள்ளையாடையும், கையில் மாதுளம் பழமும், நீலப்பூவைக் கொண்ட வலது கரமும், வணக்கத்தினைக் (கை கூப்பி) காட்டும் மற்றைய இரண்டு கரங்களும் கொண்டு, பன்னிரண்டு வயதுடையவளாகவும் இருக்கு முன்னை - காசி மணிகன்னிகையுடன் நினைக்க வல்லவர் அழகு நிறை வாரணசியெல்லை கடக்காமல் அங்கேயே பிறப்பினை

அறுத்துக் கொள்வார். ஈசரின் சடைமேலிருந்து கொண்டு எல்லா உலகங்களையும் படைத்துக் காப்பவளே! எனையும் ஆண்டிடுக பாகீரதித்தாயே.

(கு-ரை) பாகீரதியின் உருவ அடையாளம் இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. அன்றேபிறப்பறுப்பார் -'கருவாசனை கழிக்குங் காசிநகர், - திருவிளை. (வெள்ளையானை - 6) எனவரும். இப்பதிகப் பாடல்களின் ஈற்றடி அமைப்பு வெகு அழகாக இருக்கிறது.

சிவனார் சடைமே லுமை கண்டே
தேனார் கூந்த லேதென்னச்
செழுநீர் வாழ்சை வலமென்னச்
செவியே தெனநீர் வள்ளையென
நவமார் வதன மேதென்ன
நன்னீர்க் கமல மலரென்ன
நயன மொருமூன் றேதெனநீர்
நாட்டுங் கழுநீர் மீன்களெனத்
துவர்வாய் நகையே தென அந்நீர்
தோன்று பவளந் தரளமெனச்
சோதி மேனி யேதென்னத்
தூய கங்கை வெளுப்பென்ன
இவர்தாம் புகழ்த லுனையன்றோ
ஈரே ழுலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (3)

(பொ-ரை) சிவனது சடைமேல் கண்ட காட்சிக்கு உமை விளக்கம் கேட்கிறாள். தேன் பொருந்திய மலர்களணிந்த கூந்தல் அங்கே ஏது என்றாள் - செழுநீரில் வாழும் பாசியன்றோ அது என்றார் பரமசிவன். செவி ஏது என - நீரில் வாழும் வள்ளைப்பூ என்றார். புதுமைநிறை முகம் அங்கே எப்படி வந்தது என - நல்லநீரில் வாழும்தாமரையன்றோ அதுஎன்றார். மூன்றுகண்கள் உளதேயென்ன - நீரில் வாழும் குவளைகளும் மீன்களும் அதுவென்றார். சிவந்த வாயின் நகைப்பு எப்படி என்று கேட்க - பவளமும் முத்துக்களுமே அவ்வாறு தோன்றுகின்றன என்றார். ஒளிவீசும் உடம்பு வந்தவாறு தான் எப்படி - என அது கங்கை அலையின் நுரை வெளுப்பே -எனச் சாதித்தார். இப்படி ஒவ்வொன்றிற்கும் சமாதானம்கூறும்வகையில்

இறைவன் ஈரேழுலகும் பெற்ற பாகீரதியாகிய உனையன்றே புகழ்ந்தார்.

(கு-ரை) பாசி - கூந்தலுக்கும், வள்ளை செவிக்கும், தாமரை முகத்திற்கும், நீலமும் மீனும் - கண்ணிற்கும், பவளமும் முத்தும் வாயின் நகைக்கும், நீரின் நுரை - மேனி வெளுப்புக்கும் உவமை ஆகி இன்பந்தந்தன. 'சைவலம் படர்ந்து தடங்கயலுகளும் செய்ய பூங்கமலச் செழுமல ரோடை' - (பண்டாரமும் - 20) என, உருவகமாக வந்தது. 'திருவளர் தாமரை சீர்வளர் காவிகள்' (திருக்கோ-1) என்ற தொடர் மூலம் தாமரை - முகத்திற்கும் காவி மலர் - கண்ணுக்கும் உவமையாதலைப் பார்க்கிறோம். 'முத்தன்ன வெண்ணகையாய்' என்பது (திருவெம்-3) திருவாசகத் தொடர். 'நுரைமுகந்தன்ன மென்பூஞ்சேக்கை' (புறம் - 50) என்று வருவதால் 'நுரை' வெளுப்புக்கும் மென்மைக்கும் உவமையாதல் உண்டென உணர்க. பதினான்கு உலகையும் பெற்றவளாயிருந்தும் சிவன் புகழும் அழகு படைத்துள்ளாயே - என்றதுமோர் நயம். சடையின் மேலே தையலைத் தாங்கியதை, கன்னியையங் கொரு சடையிற் கரந்தான் - என்பார் அப்பர் - (6-84-6)

(தொடரும்)

இன்றைய மனிதனின் அவலநிலை

இன்றைய மனிதனுக்கு அளவற்ற பிரச்சனைகள், அவன் விஞ்ஞான அறிவுக்கு எட்டாதவாறு, எதிர்வருகின்றன. அவனது விஞ்ஞான அறிவு வியக்கத்தக்கதுதான் - ஆனால் அவனது மனோ தத்துவம் விசனிக்கத்தக்கதாக உள்ளது. அவன் விண்ணையும் கடலையும் அளக்கிறான் - ஆனால் அவனது மனம் உள்முகமாக அவனையே காணக்கூடுவதில்லை. அவன் தொலைநோக்கியைக் கண்டிருக்கிறான் - ஆனால் அவனால் தன்னைநோக்கியே காணமுடிவ தில்லை - எல்லாம் அவனுள் இருப்பதை அறியும் தெய்விகநோக்கு அவனிடம் அமையவில்லை. இது கருதத்தக்கதாகும்.

— கவியோகி சுத்தானந்த பாரதி.

(Yoga for the Modern World)

திருப்புறவார்பனங்காட்டூர் - தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

பனைமரத்தைத் தலமரமாகக்கொண்டுள்ள சிவதலங்கள் ஐந்து. அவையாவன :- சோழநாட்டில் திருப்பனந்தாள், திருப்பனையூர் என்ற தலங்களும், தொண்டைநாட்டில் திருவன்பார்த்தான் பனங்காட்டூர், திருவோத்தூர் என்ற தலங்களும், நடுநாட்டில் திருப்புறவார்பனங்காட்டூர் என்ற தலமும் ஆம். இவற்றுள் பனங் காட்டூர், என்ற பெயருடையன இரு தலங்கள் ஆதலின் இவற்றை வேறு பிரித்தறிதற்கு வன்பார்த்தான்பனங்காட்டூர், புறவார்பனங் காட்டூர் என்ற அடைமொழிகள் சேர்த்துவழங்கப்படுகின்றன. புறவு - முல்லைநிலம். காடடர்ந்த நிலம் எனப்பொருள் தரும் சொல். காடுகளால் சூழப்பெற்று இத்தலம் விளங்கியதாதலின் புறவார் பனங்காட்டூர் என வழங்கப்பெற்றது. திருப்புறவார்பனங்காட்டூர் பனையபுரம் என இதுபோது வழங்குகிறது.

இத்தலம் தேவாரப்பாடல்பெற்ற நடுநாட்டுத்தலங்கள் 22-இல் 20-ஆவது திருத்தலம். தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரந் தாலுக்காவில் முண்டியம்பாக்கத்தை அடுத்துள்ளது. வழி :- விழுப்புரம் - கடலூர் புகைவண்டித் தொடரில் முண்டியம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 3 கி. மீ. தூரத்தில் பனையபுரம் உள்ளது. விழுப்புரத்திலிருந்து திருக்கனூர்வழியாகப் பாண்டிச்சேரி செல்லும் பேருந்துகளில் சென்றால் பனையபுரம் திருக்கோயிலுக்கு அருகில் இறங்கலாம். பண்ணுருட்டியிலிருந்து நேரே சென்னை செல்லும் பேருந்துகளில் பனையபுரம் செல்லலாம். இவ்வழியில் பேருந்துகள் குறைவு.

தலச் சிறப்பு :

சூரியன் வழிபட்ட தலம். சிபிச்சக்கரவர்த்தி தன்னிடம் அடைக் கலமடைந்த புறுவைக் காத்ததற்காகத் தன் கண்களைப் பறித் தளிக்க, இறைவன் அம்மன்னனின் கடமை உணர்வை அறிந்து அவனுக்குக் காட்சிதந்து இழந்தகண்களை மீண்டும் அருளினர். அதனால் இத்தலத்து இறைவர்க்குக் கண்பறித்து அருளிய கடவுள் என்ற பெயர் ஏற்பட்டது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ள தலம் இது. சூரியன் வழிபாடு செய்ததை உணர்த்தும்வகையில் ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் ஏழு நாட்களிலும் சூரிய பூஜை நடந்துவருகிறது.

கோயிலமைப்பு :

கோயில் பேருந்து சாலையின் அருகிலுள்ளது. கிழக்குநோக்கிய திருக்கோயில். சுவாமி அம்பாள் சந்நிதிகள் இரண்டுமே கிழக்கு நோக்கி உள்ளன. அண்மையில் நடைபெற்ற திருப்பணி, மகா கும்பாபிஷேகம் ஆகியவற்றால் கோயில் புதுப் பொலிவோடு விளங்குகிறது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன.

இராஜகோபுர வாயிலைக் கடந்தவுடன் கொடிமரம் நந்தி பலி பீடங்கள் காட்சி தருகின்றன. வலமாகவரத் தொடங்கும்போது கோயில் வாயிலில் பெரியதொரு பலகைக் கல்லில் விநாயகர் திருவுருவம் செதுக்கப்பெற்றிருப்பதைத் தரிசிக்கலாம். மேற்குப் பிராகாரத்தின்தென்மேற்கில் தல விநாயகர் விளங்குகிறார். அடுத்து ஆறுமுகக்கடவுள் வள்ளி தெய்வானை அம்மையார்கள் இருபுறங் களிலும் விளங்க எழுந்தருளி இருக்கிறார். இக்கடவுள் சந்நிதி சிறப் போடு காட்சி தருகிறது. அடுத்து, தலமரம் பனை உள்ளது. சோமாஸ்கந்தர்போல மூன்று மரங்கள் உள்ளன. அடுத்து வடக்குப் பிராகாரத்தில் கிழக்குநோக்கி அம்பாள்கோயில் உள்ளது. கிழக்கே ஈசானத்திசையில் யாகசாலையை அடுத்து நவக்கிரகங்கள் உள்ளன.

சுவாமி சந்நிதி முன்மண்டபத்தில் நந்திதேவர் விளங்குகிறார். இம்மண்டபம் அலங்காரமண்டபமாகவும் உள்ளது. நேர்வாயிலோடு புடை வாயிலும் உள்ளது. புடை வாயில் வழியாக வரும்போது வாயிலில் அதிகார நந்தி, விநாயகர், துவாரபாலகர், ஆறுமுகர், சனிபகவான் ஆகியோரைத் தரிசிக்கலாம்.

இரண்டாவது வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற் பிராகாரம். கிழக்கே சூரியன், தெற்கே அறுபத்துமூவர், மேற்கே சப்தமாதர்கள், இடபாரூடர், திருமால், நால்வர், கெஜலக்ஷ்மி, ஆறுமுகர் திருவுருவங்களைத் தரிசிக்கலாம். கோஷ்டங்களில் தெற்கே அழகியபிக்ஷாடனர், தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங் கோத்பவர், வடக்கே பிர்மா, துர்க்கை உள்ளனர். சண்டேசுரர் கோயில் தனியே உள்ளது.

மூன்றாவது திருவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் அழகிய சிறிய மகாமண்டபம் உள்ளது. உற்சவமூர்த்திகள் நடராசர் ஆகிய மூர்த்திகள் இங்குள்ளனர். அடுத்து அர்த்த மண்டபம். அதை அடுத்து, கர்ப்பக்கிருகம் உள்ளது. இங்குதான் அருள்மிகு புறவார் பனங்காட்டூர் இறைவர் எழுந்தருளி விளங்குகிறார். அழகிய இலிங் கத்திருமேனியால் நம்மைக் கவரும் மூர்த்தியாக இவ்விறைவர் காட்சிதருகிறார்.

அம்பாள் கோயில் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மகா மண்டபம் என்ற அமைப்புடன் விளங்குகிறது.

மூர்த்திகள்:

சுவாமி திருப்பெயர் அருள்மிகு பனங்காட்டீசுவரர். சிபிச் சக்கரவர்த்திக்குக் கண்கள் வழங்கிய காரணத்தால் நேத்ரோத் துதாகேசுவரர் என வழங்கப்பெறுகிருர். அம்பாள் திருப்பெயர் அருள்மிகு புறவம்மை என்பதாகும். சத்தியாம்பிகை என வழங்கப் பெறுகிருர். தலமரம் - பனை. தீர்த்தம் - பதுமதீர்த்தம்.

புராண வரலாறுகள்:

சூரியன்வழிபட்டது. சிவபெருமானை நிந்தித்துத் தக்கன்செய்த வேள்விக்குச் சென்று அவித்தப்பாகம் உண்ட அனைத்துத்தேவர்களும் சிவபெருமான் கோபத்துக்கு ஆளாயினர். அகோர வீரபத்திரர் சிவபெருமான் கட்டளைப்படி தக்கனது வேள்விச் சாலைக்குச் சென்று தேவர்களுக்குத் தண்டனைகள் தந்தார். பகலவன் பல்லிழந்தான். தான் செய்த தவறுக்கு வருந்தி சிவபெருமானைப் பலதலங்களிலும் வழிபாடுகள் செய்து உலகனைத்திற்கும் ஒளியூட்டும் தனது பழைய உருவத்தைச் சிவபிரானை வேண்டிப் பெற்ருன். சூரியன் வழிபட்ட தலங்களில் புறவார் பனங்காட்டூரும் ஒன்ருகும். ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் முதல் தேதிமுதல் ஏழாம் தேதிவரை சூரிய பூஜை நிகழ்கிறது. காலைக்கதிரவனின் ஒளிக்கரம் இறைவன் திரு மேனிமீது படுவதை இன்றும் நாம் காணலாம்.

சிபி வழிபட்டது:

இம்மன்னன் சூரிய குலத்தில் தோன்றியவன். உயிர்களின் பால்மிக்கஇரக்கமுள்ளவன். அடைக்கலப்பொருளைத்தன்னுயிரைத் தந்தேனும் காக்கும் குணமுள்ளவன். இவனது உத்தம குணத்தைச் சோதித்து இவன் புகழை உலகறியச் செய்தற்கு இந்திரனும் அக்கினியும் எண்ணினர். பருந்தாகவும் புருவாகவும் உருவெடுத் தனர். புரு பருந்தினிடமிருந்து தன்னைக் காக்குமாறு வேண்டிச் சிபியிடம் அடைக்கலமாக அடைந்தது. பருந்து தனக்கு உணவுக் பொருளாதற்குரிய புருவை விடுவிக்குமாறு கேட்டது. சிபி புருவைக் காத்தற்குத் தன்தசையை ஈடாகத் தருவதாகக் கூறினன். பருந்து புருவின் எடைக்கு எடை தசைகேட்டது. தராசுத்தட்டு ஒன்றில் புருவைவைத்து எடைக்கு எடை தன் தசையை அரிந்துவைத்தான் சிபி. எடை சரியாகாததைக் கண்ட பருந்து அவனது கண்களைக் கேட்டது. சிபி தன் கண்களைப் பெயர்த்துத் தராசில் வைத்துத் தானும் துலையில் ஏறினன். அவனதுஅபயகுணத்தின் மேன்மையை அறிந்து பனங்காட்டீசர் சிபிக்குக் காட்சித்தந்து அவனது கண்களை மீளவும்அருளி வரங்கள் பல தந்துமறைந்தார். இதனல்இத்தலத்து இறைவர்க்கு கண்ணருளிய இறைவர் எனப்பெயர் உண்டாயிற்று. (இவ்வரலாறு புறவார்பனங்காட்டூர் என்ற இத்தலப் பெயரில் புறவு என்பதற்குப் புரு எனப்பொருள்கொண்டு கூறப்படும் வரலாருகும்.)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் திங்கள்தோறும் தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. ஆடித்திங்கள் 4-ஆம் நாள் (19—7—85) வெள்ளிக்கிழமை அன்று நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகிய திருவாமாத்தூர் அருள்மிகு அபிராமேசுவரர் ஆலயத்தில் சிறப்புவழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப் பெற்றன. 'திருவாமாத்தூர்த் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ., உரையாற்றினார். அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்துவருகிறது. 4—8—85 அன்று 50 ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் குருவழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துச் சாகித்யகர்த்தா, சுவாமி சரவணபவானந்தா 'இறையருள்' என்ற தலைப்பில் உரையாற்றித் தருமையாதீனம் தொடர்பாகத் தாம்யாத்த சாகித்யங்கள் சிலவற்றைப் பாடிக்காட்டினார்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர்புராணச் சிந்தனையாகத் திருஞானசம்பந்தர் திருவவதாரம், ஞானப்பால் உண்டமை பற்றிய வரலாற்றுப் பகுதிகளைத் தத்துவநோக்கோடு விளக்கி அருளினார்கள். ஞானசம்பந்தர் திருவவதாரம் 19 காரணங்கள்கொண்டு அமைந்தபான்மையைச் சைவ சித்தாந்தநோக்குடன் சிறப்புறவிளக்கினார்கள். ஞானசம்பந்தர்பிரம தீர்த்தக்கரையில் அழுதருளியமைபற்றிக் குறித்து அன்றைக்கு மட்டும்அழவில்லை; பண்டுதவம் புரிந்தபான்மையினராகிய சம்பந்தர்

"திருந்தடிமறக்குமாறு இலாதஎன்னை மையல்செய்திடும் மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினய் " என அழுதமை பற்றிக் குறித்தார்கள். அகச்சான்ருக மேற்காணும் திருத்துருத்திப்பதிகப் பாடலை அருளியமை நல்ஆய்வாகஅமைந்தது. ஞானசம்பந்தர் 'தோடுடைய செவி' எனப்பாடிய சிறப்புப்பற்றியவிளக்கம் காரணகாரியத்தொடர் புடன் இனிமையாக இருந்தது. திருமுறைகள், திருக்குறள், சித்தாந்த சாத்திரங்களை மேற்கோள்காட்டி நன்கு விளங்கும் வண்ணம் புராணத்தை உபதேசித்தார்கள். அன்பர்கள் கலந்து கொண்டு, பயனுற்றனர்.

அடுத்து 1—9—85 அன்று 51 ஆம் அருளுபதேசக் கூட்டம் நிகழ்வுறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுக.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சமயகுரவருள் மூன்ருமவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஆடிச்சுவாதி நாளாகிய 25—7—85 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பிறகு சுந்தரர் அருள் வரலாற்றுத் தொடர் புடைய பெரியபுராணப் பகுதிகள் பாராயணம் செய்யப்பெற்றன. திருத்தொண்டத்தொகை பாராயணம் நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளிவழிபாடாற்றினுர்கள் இரவு ஸ்ரீசுந்தரர், சேரமான் பெருமாள் நாயனுர் திருவீதியுலா நிகழ்வுற்றது. திருவீதியுலாவின் போது வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம்.ஏ., பி. எச்டி., பி. எட்., ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவாற்றினர். வேதபாராயணம், திருமுறைப் பாராயணங்களுடன் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது. அன்பர்பலர் தரிசித்தும்சொற்பொழிவுகளைக்கேட்டும் பயனுற்றனர்.

ஆடிப்பூர விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திலும் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திலும் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்திலும் ஆடிப்பூர மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 21—7—85 ஞாயிறன்று ஆடிப்பூரநாள் விழாவன்று அன்பர் பலர் சுவாமி தரிசனம் செய்து இன்புற்றனர்.

நாயன்மார் குருபூஜைத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஆடிப்பூரநாளில் (24—6—85) அமர்நீதிநாயனர், ரேவதி நாளில் (10—7—85) ஏயர்கோன்கலிக்காம நாயனர், ஆடிச் சித்திரை நாளில் (24—7—85) பெருமிழலைக்குறும்பர், கேட்டை நாளில் (28—7—85) கலியநாயனர், கோட்புலிநாயனர், கார்த்திகை நாளில் (9—8—85) மூர்த்தி நாயனர், புகழ்ச்சோழ நாயனர் குருபூஜை சிறப்பாக நடைபெற்றன. குருபூஜைநாட்களில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அருச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஆகமபாடசாலை, தேவாரபாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், அன்பர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். புராண விரிவுரைக்குப்பின் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 14—7—85 ஞாயிறு மாலை நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபின், திருமுறைத் தொண்டர் திரு. என். இராம மூர்த்தி ஐயர் அவர்களும், நிலைய ஓதுவார் சாமி. தண்டபாணியும், வேளூர்ப்பதிகங்களையும், முருகன் நாமாவளிகளையும் பாராயணம் செய்தார்கள்.

டாக்டர் செல்வி. சிவ. பார்வதி அவர்கள் இனியதோர் வரவேற்புரை நிகழ்த்தியபின், திருமதி குன்னக்குடி பாலா அவர்கள், திருப்புகழ், காவடிச் சிந்து, நாமாவளி முதலிய பாடல்களையும், சேர்ந்திசையாக எளிய பாடல்கள் சிலவற்றையும் பாடினர்கள்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியை திருமதி இராசலட்சுமி ராமச்சந்திரன் அவர்கள் ''முருகன்பெருமைகளைத்'' தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கந்தபுராணம் முதலியவற்றினின்று மேற்கோள்காட்டிப் பேசினர்கள்.

திருமதி. கௌரி இராசகோபால் அவர்கள், விழாநிகழ்ச்சிகளின் சிறப்பினைச் சுருங்கக்கூறி, நன்றி நவில விழா வாழ்த்துப் பாட்லுடன் இனிதே நிறைவுபெற்றது.

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவுகள்

அனைத்துலகச் சைவசித்தாந்தஆராய்ச்சிநிறுவனமும், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகமும், மதுரைக் குருஞானசம்பந்தர் பணி மன்றமும் இணைந்து, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பழைய வளாகத்தில் '' ஆற்றல் '' என்ற பொருள் குறித்து, கருத்தரங்கு 1985 ஜூலை 27, 28 தேதிகளில் நடத்தின. 50 அறிஞர்கள் கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.

ஜூலை 27-ந் தேதி சனிக்கிழமை கருத்தரங்கு காலை10மணிக்கு பி. டி. ஆர். கமலத்தியாகராஜன் தலைமையில்தொடங்கியது. சைவ சித்தாந்தம் இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு ஒத்த வகையில் அமைந்துள்ளது என்றும், அதனைப் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் முறையில் எளிய நடையில் எழுதி நூல்கள் வெளியிடப் படவேண்டுமென்றும் கூறினர். இயக்குநர் டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன் ஆற்றல் கருத்தரங்கின் நோக்கங்களை விளக்கினர்.

நெறி விளக்கச்சொற்பொழிவினை மதுரைக் காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் டி. பி. சித்தலிங்கம் ஆற்றினர்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் இராம. பெரியகருப்பன் முதலாம் அமர்வுக்குத் தலைமை வகித்தார். தமிழ்த்துறையினைச் சார்ந்த இணைப்பேராசிரியர் டாக்டர் சு. வெங்கட்ராமன் 'தேவாரத்தில் ஆற்றல்' என்ற தலைப்பிலும், மெய்ப்பாட்டியல் துறைத்துணைப்பேராசிரியை டாக்டர் கோமதி சூரியமூர்த்தி '' 8, 9, 10, 11 திருமுறைகளில் ஆற்றல் '' என்ற பொருள்பற்றியும், தியாகராசர் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் ஆ. ஆனந்தராசன் '' 12-ம் திருமுறையில் ஆற்றல் '' என்ற தலைப்பிலும் கட்டுரை வாசித்தனர்.

இரண்டாம் அமர்வு ஜூலை 28-ம் தேதி ஞாயிறன்று தியாகராசர் கல்லூரித் தலைவர் டாக்டர் சுப. அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. அப்போது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் ஜி. விஜயவேணுகோபால் '' மெய்கண்ட சாத்திரத்தில் ஆற்றல் '' என்ற பொருள் பற்றியும், மெய்ப்பாட்டியல்துறைத்தலைவர் பேராசிரியர்டாக்டர் எஸ். கங்காதரன்'' மனவாசகம் கடந்தார் நூலில் ஆற்றல்'' என்ற தலைப்பிலும்

மதுரை இறையியல் கல்லூரிப் பேராசியரிர் டாக்டர் தாமஸ் தங்கராஜ் '' சிவஞானசித்தியாரில் ஆற்றல் '' என்ற பொருள் பற்றியும் கட்டுரை வாசித்தனர்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழக ஆற்றல் துறைத் தலைவர் டாக்டர் சி. இ. சூரியமூர்த்தி மூன்றும் அமர்வுக்குத் தலைமை வகித்தார். மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் எல். ஆர். கணேசன் ' அறிவியலில் ஆற்றல் ' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினர்.

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத் தலைவர் திரு. பி. டி. ஆர். கமலத்தியாகராஜன் கருத்தரங்கில் கலந்துகொண்ட அறிஞர்களுக்கு இரண்டு நாட்களிலும் உணவு, சிற்றுண்டி ஏற்பாடுகள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

வெளிவந்துவிட்டது !

சித்தாந்த சைவ வினு விடை

(நான்காம் பதிப்பு)

ஆசிரியர் :- திரு. கு. திருஞானசம்பந்தசாமி பிள்ளை
திரிசிரபுரம்.

- இந்நூல் சைவ சித்தாந்தம்பற்றி 574 வினு விடை மூலம் விரிவான விளக்கம் தருகிறது.
- நான்கு முறை இந்நூல் பதிப்பிக்கப்பட்டதே இந்நூலின் சிறப்புக்கு நற்சான்று ஆகும்.
- உலகியல், சித்தியல், வேத சிவாகமவியல், பதியியல், சக்தியியல், சிவகுமாரவியல், பாசவியல், மூர்த்தியியல், ஸ்தலவியல், தீர்த்தவியல், ஆசாரியவியல், முத்தியியல், எனப் பன்னிரு தலைப்புக்களில் சித்தாந்த சாத்திரம் இந்நூலில் பயனுறுமுறையில் ஆய்வுசெய்யப்படுறது. பக்கங்கள் 186. **அடக்க விலை ரூ. 8/-**

அஞ்சல் செலவு ரிகார்டெட் டெலிவரி ரூ. 1—50

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், மயிலாடுதுறை 609 001.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஹு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—1985 முதல் 16—9—1985 முடிய)

ஸ்ரீகுரோதனஹு ஆடிமீ 3உ சுக்கிரவாரம் மக நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 54 நாழிகை 40 வினடிக்குக் கடகலக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு, கடகராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். மறுதினம் ஸ்திரவாரம் ஆவணிமீ 1உ விஷ்ணுபதி புண்ணிய காலம். சேனதிபதிசனிபகவான்ஆகிருர். சங்கிரமணகாலகிரகஸ்திதியினல் லோகத்துக்கு நல்லன ஏற்படும். எங்கும் கரிசல்பூமி செழிக்கும். தொழில்களுக்கான கச்சாப்பொருள்கள் விருத்தியடைந்து வரும். பிராந்தியங்களில் மக்களுக்கு அரசு ஆதரவில் ஏற்பட்ட சிறுதொழில்களிலும் விருத்தி ஏற்படும். நாடுகளில் நல்ல பொருளாதாரம் ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில்ஈஸ்வரனருள் பெற்றுவந்து சிவராஜயோகத்தில்திருவீற்றிருக்கின்ற சிவஞானகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் லோகமாந்தர்கள் கல்வி, கலைஞானம், வேதங்கள், சாஸ்திரங்களின் ஞானம், தத்துவ ஞானம் பெற்று விளங்கும் பொருட்டு ஆதாரக் கலாசாலைகள் சைவசித்தாந்த மேல்நிலை ஆராய்ச்சி நிறுவனங்கள் எங்கும் ஏற்பட அனுக்கிரகித்து, தொடங்க கர்த்தாவாக இருந்து ஆசியருள்வார்கள். உலகெங்கும் சிவசமயம் பரவும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பொது நல காரியங்களை நடத்தும். அடிக்கடி வெளியூர் பயணம் ஏற்படும். பூஷணங்களின்

பிராப்தி வெளுமை வஸ்துவின் பிராப்தியை யளிக்கும். வித்துவத்வம் கலைத்துறைகளில் புகழ் ஏற்படும். வீடுவாகனங்கள் இவற்றில் நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். ஆகஸ்டு 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். நல்ல பண வருமானம் வரவாகிக் கொண்டிருக்கும். மிக அவசியசெலவினமும் ஏற்படும். இரத்தின பூஷணம் வாங்குதல் ஆகும். ஆகஸ்டு 29உக்கு மேல் அரசாங்க நற்செய்தி வரும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். ஆகஸ்டு 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். நல்ல பூஷனம் தரும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலன் வரும். செப்டம்பர் முதல் முயற்சித்த எல்லாக் காரியங்களும் ஜெயபிராப்தியாக நடந்தேறும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க கௌரவப்பட்டம் தரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். ஆகஸ்டு 29-ல் ஓர் நற்செய்திவரும். எல்லாக்காரியங்களும் கண்ய ஸ்திதிக்கு ஏற்ப நடந்துகொண்டிருக்கும். ஆகஸ்டு 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். அதற்கேற்ப நற்காரிய செலவும் ஏற்படும். முன்பு வரவேண்டியவை செப்டம்பர் முதலில் வரும். வித்திய வியாபாராதி கலைத்துறைகளில் முன் முதலீடும் பின் நற்பலனும் ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருகஇருந்து வரும். செப்டம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். ஓர் இக்கட்டான நிலைமை ஏற்படும். அதில் சமாளிக்கும் ஆற்றல் தரும். தெய்வபலம் தீர்க்கதரிசிகளின் ஆசியால் எல்லா நன்மைகளும் சௌக்கியமும் தரும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். வித்தியா வியாபாராதி களில் பெரும் முதலீடும் விளம்பரமும் ஆகச்செய்யும். செப்டம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். மூன்று வகையில் பண வருமானம் வரும். வித்வத்துவம் கலைத்துறைகளில் புகழ் தரும். எழுத்து மூலவிஷயங்களில் பத்திர லிகிதங்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். பூமிஇயந்திரங்களில் விருத்தி ஏற்படும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் கெடியான தோரணைக்கு ஏற்ப வரும். ஸ்திரீவழியில் ஓர் பெரும் பொருள் வந்து சேரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறை யில் விசேஷ பலன் தரும். பூமிஇயந்திரவாகனங்களில் விருத்தி பலனை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு ஓர் உயர்வு ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். சிறிய தந்தைக்குத் தேகநலிவு ஆகிக் குணமாகும். ஜீவனோபாயத்தில் அரசாங்கத்தில் அனுகூலம் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக் கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்பவரும். ஆகஸ்டு 29 தேதிஅளவில் எழுத்து மூலம் அரசாங்கத்திலிருந்து நல்லன ஏற்பட்டு வரும். கடமை உணர்வில் பல நல்ல காரியங்களைச் செய்யும். இராசிக்கு ஓர்விபத்து ஏற்பட்டுத்தப்பும். ஸ்ரீசுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நலம். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆகஸ்டு 17, 18 செப்டம்பர் 13, 14 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். நல்ல தன வருமானம் வந்து நிறையும். வித்தியா வியாபாராதிகளில் பிரபல ஸ்திதியாகும். வீடுவாகன பிராப்தியில் ஒப்பந்த மூலம் நல்லன ஏற்படச் செய்யும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். ஆகஸ்டு 19, 20 செப்டம்பர் 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். நல்ல தன வருமானங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். வித்தியா வியாபா ராதி கலைத்துறைகளில் ஆகஸ்டு 29தேதி அளவில் நல்லன ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். சத்துருபங்கம் ஆகும், தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடக்கும். ஆகஸ்டு 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

மாயை

மாயை என்பது, சூரியகிரணங்களை மேகங்கள் மறைக்குமாறு மனிதர்களுடைய ஞானக்கிரியைகளை மறைத்துநிற்கும். அன்றி மாயையானது பொய்மையுண்டாக்குகிற போகத்தைப் பண்ணு வதாம். அசத்தியத்தைச் சத்தியமெனத் தோன்றுவித்துத் தன் னுடைய பிள்ளைகளாகிய தனு கரண புவன போகங்களிடத்தி லுண்டான குணதோஷங்களைக் காட்டாமல் அசுசியை அசுசியெனக் காட்டாது மறைத்துநின்று நமதறிவையியக்கும். அது சுத்த மாயை, அசுத்தமாயை, பிருகிருதிமாயையென மூவகைத்து.

— சித்தாந்த சைவ வினுவிடை.

அனைத்துலகச் சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி
பாடம் - 7.

சித்தாந்த சாத்திரங்கள்

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
கற்கும் சரக்கன்று காண்.

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள்
[போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த அருள்நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்செம்பதுமத் திருத்தாள் போற்றி.

சைவ சித்தாந்தத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் பல உள. அவற்றுள் 14 நூல்கள் சிறப்பாக மெய்கண்ட சாத்திரங்கள் என வழங்கப்பட்டு வருகின்றன. இவை திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. இதனை,

உந்தி. களிறே, உயர்போதம், சித்தியார்,
பிந்திருபா. உண்மை, பிரகாசம் - வந்த அருள்,
பண்பு வினா, போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சுவிடு,
உண்மைநெறி, சங்கற்பம் உற்று.

என்று பழைய வெண்பா ஒன்று வரிசையாக எடுத்துக்கூறும். இந் நூற்களைப்பற்றி முதற்கண் பார்ப்போம்.

உபதேச பரம்பரை :

இறைவன் (பரமசிவன்) சதாசிவ மூர்த்தியாக எழுந்தருளி இருந்து 28 சிவாகமங்களை அனந்தேசுவரர்கட்கு அருளிச்செய்தார். அவர் சீகண்ட பரமேசுவரருக்கு அருளிச்செய்ய அவர் ஆல நிழல் கீழ் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளித் தமது மாணாக்கராகிய நந்தி யெம்பெருமானுக்குச் சிவஞான போதத்தை அருளிச்செய்ய, அவர்

அதனைச் சனற்குமார முனிவர்க்கும், அவர் அதனைச் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி முனிவர்க்கும் அருளிச்செய் தார். பரஞ்சோதி முனிவர் திருக்கயிலாயத்தைவிட்டு அகத்தியரைக் காண பொதியமலைக்குப் போகும் வழியில், திருவெண்ணெய் நல்லூரில், மிகுந்த பரிபக்குவமுற்றிருந்த குழந்தை சுவேதவனப் பெருமானது நிலையை உணர்ந்து, அவருக்குத் தீக்கை செய்து, சிவஞானபோதத்தை உபதேசித்து, மெய்கண்டார் என்ற திரு நாமத்தையும் சூட்டினர்.

மெய்கண்ட தேவர் திருவெண்ணெய்நல்லூரில் சுயம்புமூர்த்தி யாக எழுந்தருளியிருந்த பொல்லாப் பிள்ளையார் சந்நிதியில் தமக்கு உபதேசிக்கப்பெற்ற சிவஞான போதத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடி இருந்தனர். அப்போது அச்சிவஞான போதத்தை அருணந்தி சிவாசாரியாருக்கு அருளிச் செய்தார். அவர் தமது ஆசிரியராகிய மெய்கண்ட தேவர் ஆணைப்படி சிவஞானபோதத்தை விரித்து சிவஞான சித்தியார் என்ற நூலையும், நம் மெய்கண்ட தேவரிடத்து வினவிய வினாக்களைக் கொண்ட இருபா இருபஃது என்ற நூலையும் அருளிச்செய்தார்.

மெய்கண்டாரது மாணக்கர் முப்பத்து ஒன்பதின்மருள்ளே மற்றொரு மாணக்கராகிய மனவாசகங்கடந்தார் என்பவர் உண்மை விளக்கம் என்ற நூலை அருளிச்செய்தார்.

அருணந்தி சிவாசாரியரின் மாணக்கரான மறைஞானசம்பந் தரின் மாணக்கராகிய உமாபதி சிவாசாரியர் எட்டு சித்தாந்த நூல்களை அருளிச்செய்தார். அவை சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் வரையுள்ள எட்டுமாம். எனவே 14 மெய்கண்ட நூல் களில், 12 மெய்கண்டார் பரம்பரையில் வந்தவை. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகியஇரண்டும் மெய்கண்டார் காலத்துக்கு முந்தியன. திருவுந்தியார் திருவியலூர் உய்யவந்த தேவநாயனு ராலும், திருக்களிற்றுப்படியார் அவரதுமாணக்கரின் மாணக்கரான திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாராலும் அருளப்பெற்றவை.

மெய்கண்ட நூல்களின் காலம் :

சங்கற்ப நிராகரணத்தின் பாயிரத்தில் உமாபதிசிவம் இந்நூலை அருளிய காலத்தைக் குறிப்பிடுகிறார்.

சாலிவாகன சகாப்தம் 1235 - ஆம் ஆண்டில் இந்நூலைப் பெற்றதைக் காட்டுகிறார். இது கி. பி. 1313 ஆகிறது. எனவே மெய்கண்டார் காலம் 13-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியாதல் வேண்டும்.

மெய்கண்ட தேவர் கி. பி. 1232-ல் வாழ்ந்தார் என்பதனை, திருவண்ணுமலை அருணுசலேசுவரர் திருக்கோயிலின் முதற்கற்றூண் வடபுறச்சுவரில் சோழ அரசனுல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகிறது.

எனவே மெய்கண்ட நூல்கள்எல்லாம் 13-ஆம் நூற்றுண்டிலும், 14-ஆம் நூற்றுண்டிலும் தோன்றியவை என்பது அறியப்படும்.

மெய்கண்ட நூல்கள் :
திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்.

திருவுந்தியார் 45 பாடல்களைக் கொண்டது. இதற்கு ஒரு பழைய உரை உண்டு. இதற்குத் திருவாடுதுறை ஆதீனச் சிற்றம் பலத்தம்பிரான் உரைசெய்தனர் என்பர் சிலர். வேறுசிலர் இதனைத் தில்லைச் சிற்றம்பலர் என்னும் சிவப்பிரகாசனர் செய்தார் என்பர்.

திருக்களிற்றுப்படியார், திருவுந்தியாருக்கு விரிவுரையாக அமைந்தது; 100 பாடல்களைக் கொண்டது. இதற்குச் சிவபிரகாசத் தம்பிரான் உரை செய்தனர்.

உந்தி என்பது மகளிர் பலர் சேர்ந்து பறவைகள் பறப்பது போன்றுகைகளை அசைத்துவிளையாடும்ஒருவகைவிளையாட்டுஎன்பர். இது உம்-உன்னுடைய, தீ-தீமைக்குக்காரணமான மும்மலங்களும், பற-உன்னைவிட்டுப்போகும்படி. இந்த ஞானசாத்திரத்தின் கருத்தே உனது குறிக்கோளாக நிற்பாயாக என ஆசிரியர் மாணுக்கனுக்கு அறிவுறுத்துவதாகப் பொருள் காண்பர்.

திருக்களிற்றுப்படியாருக்கு இப்பெயர் வந்ததற்கு ஒருவரலாறு கூறப்படுகிறது. இந்நூலைத் தில்லை நடராஜப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் பேரம்பலத்தின் பஞ்சாட்சரப்படியில் வைத்தபோது, அப்படியில் உள்ள கல் யானை தனது துதிக்கையால் மேலே எடுத்து வைத்தது என்பதும், அதுகண்டு எல்லோரும் வியந்து அதன் பெருமையை உணர்ந்தனர் என்பதும் வரலாறு.

சிவஞானபோதம் :

இது மெய்கண்ட நூல்களில் தலைசிறந்த நூலாய்த் திகழ்வது. சிவஞானம் என்பது திருவடி ஞானம் என்றும் ஒளி ஞானம் என்றும் பேசப்படுவது. சிவஞானம் - பரஞானம், அபர ஞானம், என இரு வகைப்படும். பரஞானம் - மேலான ஞானம். இது உயிர்களைப்பற்றி நிற்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களையும் நீங்கும்படி

செய்யும் இறைவன் திருவருளாகிய ஞான சத்தியை உணர்த்தி நிற்பது. அபரஞானம் என்பதுஅத்திருவருளைத் தெளியஉணர்த்தும் சித்தாந்த சாத்திரங்களால் அறியப்படும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் அறிவு.

சிவஞானபோதம் என்ற சொற்றொடரில், சிவஞானம் என்ற சொல் அபரஞானத்தை உணர்த்திநிற்பது. போதம் - போதித்தல்; திருவருள், ஆகமங்கள் ஆகிய இரண்டின் பொருள் இது என உணர்த்துதல். இங்கு ஆகமம் என்று கூறும்போது ஆகமங்களின் சிறந்த கூறாகிய ஞானபாகத்தை நாம் கொள்ளவேண்டும். எனவே சிவஞானபோதம் என்பது சைவ ஆகமங்களின் ஞானபாதப்பொருள் நிச்சயத்தை (சைவசித்தாந்தத்தை) உணர்த்துவது எனப்பொருள் தருவது. அதாவது முப்பொருள்களின் உண்மை இயல்புகளைத் தெளிய உணர்த்துவது.

சிவஞான சித்தியார் :

இந்நூல் மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்தை முதல் நூலாகக் கொண்டு அவரது மாணாக்கரான அருணந்தி சிவாசாரியரால் அருளப்பெற்றது. சிவஞானபோதச் சூத்திரக் கருத்துக்களை விரிவாக எளிய நடையில் பாடல்களால் கூறுவது; சைவ ஆகமக் கருத்துக்களை ஆங்காங்கு உணர்த்துவது. '' சிவத்துக்குமேல் தெய்வம் இல்லை; சித்திக்கு மேல் நூல் இல்லை '' என வழங்கும் பழமொழியும் இதன் சிறப்பை உணர்த்தும்.

சிவஞான சித்தியார் என்ற நூற்பெயரில் சிவஞானம் என்ற சொல் இறைவன் திருவருளாகியபரஞானத்தை உணர்த்திநிற்பது. இதனை '' இறைவன் திருவடியின் இயல்பினை நான் சொல்லுகிறேன் '' என்று நூலாசிரியர் தமது அவையடக்கப் பாடலில் கூறுவதிலிருந்து அறியலாகும்.

> மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும்
> குறைவிலா அளவினாலும் கூறொணா தாகி நின்ற
> இறைவனார் கமலபாதம் இன்று நான் இயம்பும் ஆசை
> நிறையினார் குணத்தோர்க் கெல்லாம் நகையினை நிறுத்தும்
> [அன்றே

என்பது அப்பாடல். இங்கு இறைவனார் கமலபாதம் என்றருளிச் செய்தது திருவருளாகிய பரஞானத்தையேயாம்.

இருபா இருபஃது :

இந்நூலும் அருணந்தி சிவாசாரியரால் அருளப்பெற்றது. 10வெண்பாக்களாலும் 10ஆசிரியப்பாக்களாலும் ஆனது. இதற்குத் திருவாவடுதுறை ஆதீனத்து நமச்சிவாயத் தம்பிரான் உரை ஒன்று உண்டு. சீகாழித் தத்துவநாதர் உரை ஒன்றும் உண்டு.

இந்நூலில் சிவஞானபோதத்தால் உணர்த்தப்பெற்ற சித்தாந்தக் கருத்துகளில் மிக நுண்ணியன சிலவற்றைத் தம் ஆசிரியராகிய மெய்கண்டதேவர்பால் வினவி அறிந்ததாக அமைத்து, வினுக்களை வெளிப்படையாகக்கூறி விடைகளைக்குறிப்பாற்பெற வைத்துள்ளார் ஆசிரியர்.

உண்மை விளக்கம் :

இது மெய்கண்டதேவரின் மற்ருெரு மாணுக்கராகிய மனவாசகங்கடந்தாரால் அருளப்பெற்றது. இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் இருப்பும் இயல்பும் ஆகியஉண்மைகளை விளக்கிக் கூறுவதால் உண்மை விளக்கம் எனப்பெயர்பெற்றது. முப்பொருள் அன்றி, இறைவனது திருக்கூத்து, திருவைந்தெழுத்து ஆகிய வற்றைப்பற்றியும் தமது ஆசிரியர்பால் வினவி அவர் விடை கூறுவதாக அமைந்துள்ளது.

இந்நூலில் இறைவன் நடனம் ஒரு சிறந்த பகுதி. இதுபற்றி இவர் கூறுவதைக் காண்போம்.

உயிர்கள்மாட்டுக்கொண்ட பெருங்கருணையால் இறைவன் எளிதிற் செய்யும் செயல்கள் அவரது கூத்து எனப்படும். நாடகம் நடிக்கும் ஒரு நடிகன் தான் எந்தச் செயலை நடித்துக்காட்டினும், தன் உண்மைநிலையில் அவன் மாறுபாடு ஒன்றும் அடையான். இதுபோன்று இறைவனும் தன் செயல்களால் தன் உண்மை நிலையில் ஒரு மாறுபாடும் இன்றி, ஒரே பெற்றித்தாய் நிற்பவன் ஆதலின், அவனது செயல்கள், நாடகம் அல்லது நடனம் எனப் பெற்றன. இந்நாடகம் ஊன நடனம், ஞான நடனம், ஆனந்த நடனம் என மூவகைப்படும்.

சிவப்பிரகாசம் :

சிவப்பிரகாசம் என்ற நூற்பெயர் சிவபெருமானது திருவருட் பிரகாசத்தை உணர்த்தும் நூல் என்ற பொருளைத்தருவது. இது பொது, உண்மை என்ற இரு அதிகாரங்களைக்கொண்டது. பொது

அதிகாரம் முப்பொருள் இயல்புகளையும் உயிரினது அவத்தைகளையும் கூறுவது. உண்மை அதிகாரம் ஆன்மசுத்தி, ஆன்மலாபம், அஞ்செழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை ஆகியவற்றைச் சிறப்பாகக்கூறுவது. சிவாகமங்களை மூலமாகக்கொண்ட சிவஞான போதம் மூலநூல்; சிவஞான சித்தியார் அதன் வழிநூல். சிவப்பிரகாசம் இவ்விரண்டின் சார்பு நூல் என்பர். இந்த இரண்டு நூல்களிலும் இல்லாத சிலமூல ஆகம, உபாகமக் கருத்துக்களை இந்நூல் உணர்த்துகிறது.

இந்நூலுக்கு மூன்று பழைய உரைகள் உண்டு. ஒன்று ஞானப் பிரகாசத் தம்பிரான் உரை; மற்றொன்று இவ்வுரையைத் தழுவி விரிவாக எழுதப்பெற்ற மதுரைச் சிவப்பிரகாசர் உரை. மூன்றாவது சிவஞான முனிவரின் மாணாக்கரில் ஒருவரான இலக்கணம் சிதம்பர நாதர் உரை. மதுரைச் சிவப்பிரகாசர்செய்த உரை, திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், ஏனைய சைவசித்தாந்த நூல்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோளைக்காட்டி மிகவும் விரிவாக அமைந்துள்ள ஒரு சிறந்த உரை.

திருவருட்பயன் :

இந்நூல் பெயருக்கு, இறைவன் திருவருளால் உயிர்கள் அடையும் பயனை உணர்த்தும் நூல் என நாம் பொருள் கொள்ளலாம். இது திருக்குறள் போன்று குறட்பாக்களால் அமைந்தது. இது, பத்து அதிகாரங்களில், திருவருளைக் கொடுக்கும் பதியின் தன்மை, திருவருளால் நீக்கப்படும் மலங்களின் தன்மை, திருவருளின் தன்மை, திருவருள் வழியாக வரும் குருவின் தன்மை, உயிர் திருவருளால் பேரறிவைப்பெறும் முறையை, அவ்வருளால் உயிர் பாச நீக்கம் பெறும் முறை, ஐந்தெழுத்தின் உண்மை, சீவன் முத்தர் இயல்பு ஆகியவற்றைக்கூறுவது. இந்நூலுக்கு நிரம்ப அழகிய தேசிகர் உரை ஒன்று உண்டு.

வினாவெண்பா :

இதுவும் இருபா இருபஃது போன்று ஆசிரியர் தமதுகுருவாகிய மறைஞானசம்பந்தரிடம் வினவி அறிந்த நுண்பொருள்களை வினா வடிவில் உணர்த்துவது. இது 13 வெண்பாக்களாலாயது. இது உயிர் பாசம் நீங்கிய சுத்த நிலையில் அருளுடன் சேர்ந்து அருளாக நிற்கும் என்றும், அருள்மயமாக நின்று சிவத்தை அறியும் என்றும், காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகிய வேறுபாடின்றி உயிர் சிவத்தைக் கண்டிருத்தலே பேரானந்த முத்திநிலை எனவும் கூறுவது.

போற்றிப் பஃறொடை :

இது ஒரு சித்தாந்த நூலாகவன்றி, தோத்திரப் பாடலாகவும் அமைந்திருப்பது. இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. உரை ஆசிரியர் பெயர் கிடைத்திலது. இறைவன் கைம்மாறு கருதாது தனது பெருங்கருணையால் உயிர்களது கேவலநிலையிலிருந்து முத்தி நிலைவரை உயிர்களுக்குச் செய்யும் பேருபகாரங்களைப் போற்றுவது இந்நூல்.

உண்மைநெறி விளக்கம் :

இது இறை உயிர்கள் மாட்டுச் செய்யும் 10 அருட்செயல்களை (தசகாரியத்தைச்) சுருக்கமாகக் கூறுவது. இந்நூல் சீகாழித் தத்துவநாதரால் செய்யப்பெற்றது என்பர்சிலர். எனினும் உமாபதி சிவம் அருளிச் செய்ததாகவே கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு உரை செய்த ஆசிரியர் பெயர் கிடைத்திலது.

கொடிக்கவி :

தில்லைத் திருக்கோயிலில் ஒரு ஆண்டு பெருவிழாக் கொடி ஏற்றும்போது கொடி ஏருமல் நிற்க, பின் அசரீரி ஒன்று ''உமாபதி சிவாசாரியரை அழைத்துவந்து ஏற்றுங்கள்'' என்று சொல்ல உமாபதி சிவம் கொடி ஏறும்படி அருளிச்செய்தது இந்நூல். இது சைவ சித்தாந்தத்தின் நுண்ணிய பொருள்கள் சிலவற்றையும், திருவைந்தெழுத்தின் மறை பொருளையும் உணர்த்துவது.

நெஞ்சுவிடு தூது :

உமாபதிசிவம் தம்மைத் தலைவியாகவும், தமது ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரைத் தலைவனுகவும் வைத்து, பிரிந்த தலைவன் பால் மாலை வாங்கிவரச்சொல்லி, தமது நெஞ்சைத் தூதுவிட்டதாக இது அமைந்தது.

இது பதி, பசு, பாச இயல்புகள், இறைவனுகிய பேரரசனது 10 உறுப்புகள், புறச்சமய மறுப்புகள், உபதேசங்கள் ஆகியவற்றை உணர்துவது. இதற்குப் பூவை கலியாணசுந்தர முதலியார் செய்த உரை ஒன்று உண்டு.

சங்கற்பநிராகரணம் :

இது சிவஞானசித்தியாரில் புறச்சமயங்களை மறுக்கும் பரபக்கம் போன்று, சித்தாந்த சைவத்துக்கு மாறுபட்ட சில அகச் சமயங்களை மறுப்பது. சைவசித்தாந்தத்தை மிகவும் நுட்பமாக அறிவதற்கு இந்நூல் மிகவும் துணை செய்வது. இதன் உரையாசிரியர் பெயர் கிடைக்கவில்லை. இதில் மறுக்கப்படும் சமயங்கள் மாயாவாதம், ஐக்கியவாத சைவம், பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், நிமித்த காரண பரிணாமவாத சைவம், சுத்த சைவம் ஆகியவை. இந்நூல் இச்சமயங்களின் கொள்கைகளைக் கூறி அவற்றைத் தக்க காரணம் கூறி மறுப்பது. (சங்கற்பம் - கொள்கை, நிராகரணம் - மறுப்பு.)

மிகச் சிறந்த இச் சைவசித்தாந்தம் தமிழ்நாடன்றி உலகம் முழுவதும் பரவவேண்டும்.

வினுக்கள்

1. சித்தாந்த சாத்திரங்கள் யாவை ?
2. மனவாசகம் கடந்தார் எழுதிய நூல் யாது? அதன் சிறப்புகளை விளக்குக.
3. சிவஞான சித்தியாரின் ஆசிரியர் பெயர் யாது ? அவருக்குக் குருவாக விளங்கியவர் யார் ?
4. உமாபதி சிவம் அருளிய நூல்கள் யாவை ? அவற்றைப்பற்றிக் குறிப்புகள் வரைக.
5. பரஞானம், அபர ஞானம் விளக்குக.
6. குறிப்பு வரைக :-

   திருவுந்தியார், திருவருட்பயன், சிவப்பிரகாசம், மும்மலங்கள்.

கட்டுரை வழங்கியவர் :- ஆ. சுப்பிரமணியப் பிள்ளை.